ஊழியன்

தொகுதி 7 இதழ் 5

[illegible] 1933

JL

ooo2-11, N12:2SN

N33.7.5

186934

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF B...
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௭. § ஸ்ரீமுக—மார்கழி: 1933—டிசம்பர் § திங்கள் ௫.

உள்ளுறை. பக்கம்.


| | | |
|---|---|---|
| ௧. | விநய விண்ணப்பம் ... ... | 89 |
| ௨. | நடனராசரின் நாட்டுமொழிப்பற்று; (௩) விடை; (௪) சுமித்திர சண்டேசரர் ... | 92 |
| ௫. | சிவ மகத்வம் ... ... | 93 |
| ௬. | கிருஷ்ண பலராமர் எவற்றின் அவதாரங்கள்?; (௭) முட்டை | 96 |
| ௮. | திருவாதிரைத் திருநாள் மகிமை ... | 97 |
| ௯. | தாலி ... ... | 101 |
| ௰. | கடையெழு வள்ளல்கள் ... ... | 102 |
| ௧௧. | சண்டேசுவரர் வேறு; சண்டேசுவர நாயனார் வேறு ... | 104 |
| ௧௨. | உபமன்னியு முனிவர் ... ... | 105 |
| ௧௩. | தாலியறுத்த கலியாணம் ... ... | 106 |
| ௧௪. | ஐயோ! பாவம்! ... ... | 107 |
| ௧௫. | சிவவழிபாடு ... ... | 108 |
| ௧௬. | பொங்கற் பண்டிகை ... ... | 109 |
| ௧௭. | மதிப்புரை மஞ்சரி ... ... | 110 |
| ௧௮. | சிவநேசனுக்கு மதிப்புரையும் வாழ்த்தும் ... ... | 112 |
| ௧௯. | இருபா விருபஃது ... | (33—40) |
| ௨௰. | பழமலைக் கோவை ... ... | (9—16) |


ஆசிரியர் ராம. கு. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

சென்னைப் பதிவு எண் 2302.

# செய்தித் திரட்டு.

உள்ளூர்:—புதுவெட்டி யேந்தல் என்ற சிதம்பரம் புதூரில் புதன்கிழமைதோறும் சந்தைகூடிய இடம், ஊருக்கு வெளிப்புறத்தில் தூரத்திலிருப்பதை யுத்தேசித்து ஊருக்கணித்தாய் பலவான்குடி செங்கனி நகரத்தார்கட்குப் பாத்தியமாக வுள்ள இடத்தில் சந்தைகூடச் செய்திருப்பதால், முன் சந்தைகூடிய இடத்தில் ஷை மார்க்கட்டு தங்களுக்குத் தேவையில்லையென்று ஏற்படுகிற காலத்தில் திருப்பித் தந்துவிடுகிறதென்ற ஒப்பந்தத்துடன் ராம. கு. ராம. இராமசாமி செட்டியார் தேவகோட்டை தாலூகா போர்டாருக்கு எழுதிக்கொடுத்திருந்த இரும் சாதனம் திரும்பவாங்கப்பெற்றது.

குமார விநாயகர் திருக்கோயிலில், நடராஜப்பெருமானுக்கு ௨௮௨ திருவெம்பாவைத் திருநாள் தொடங்கி, ௪௮௨ உதயத்திற்கு முன் நடராஜர் அபிடேகமும், உதயத்தில் திருவாதிரைத் தெரிசனமும் திருவுலாவும் நடைபெறும். நகரச் சிவாலயத்திலும் நடராஜரபிடேகமும் திருவாதிரைத் தெரிசனமும் திருவுலாவும் நடைபெறும்.

**துப்பை கொட்டியவழக்கு:**—தேவகோட்டை டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட் 1931—ம் ஸு O. S. 38: ராம. கு. ராம. இராமசாமி செட்டியாரின் வீட்டுச் சுவரையொட்டிக் குப்பை கொட்டியும், வேறு விதமாயும் எவ்வித அசுத்தமும் செய்யக்கூடாதென்று, அவர் க. ப. கறு. கறுப்பன் செட்டியார் மீது தொடுத்திருந்தவழக்கில், அவ்விதம் அசுத்தஞ் செய்யாதிருக்க, கனம் நீதிபதியவர்கள் 9--12--1933ல் மறியல் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

**ஆவினிப்பட்டி:**—விவேகானந்தர் கல்விக்கழகத்தின் 7-ம் ஆண்டு பரீக்ஷை 4, 5—12—33 தெய்திகளில் பூலாங்குறிச்சியிலிருக்கும் தமிழ்ப்பண்டிதர் திரு. ரெ. இராமமூர்த்தி ஐயரால் நடத்தப் பெற்றது. மாணவர் வினாக்களுக்கு நல்விடை பகர்ந்தனர். பெண்குழந்தைகள் கூறிய விடைகளைப் பண்டிதர் மிகவும் பாராட்டி, "இக் கழகத்திற் பயிலும் மாணவர்களாகிய இருபதின்மரும் செவ்விய தமிழ்நூற் பயிற்சியும் நல்லொழுக்கமும் வாய்ந்து திகழ்தல் போற்றத்தக்கதாகும். பண்டித திரு. வ. மு. இரத்தினேசுவரையரவர்களது போதனாமுறையும் உள்ளத்து உவகை விளைக்கின்றது. திருவாளர் அ. பழனியப்ப செட்டியாரவர்களுடைய நன்முயற்சியாலும், பொருளுதவியாலும் இக்கழகம் ஆறு ஆண்டுகளாக நலம்பெற நடைபெற்று வருதலைக்கண்டு மகிழ்கின்றேன்." என்பனவாய நற்கருத்துக்களைப் புத்தகத்தில் எழுதினார்கள்.

இக் கழகத்தின் 7-ம் ஆண்டு, 6-ம் மாசக்கூட்டம். திரு. ரெ. இராமமூர்த்தி ஐயரவர்கள் தலைமையில் 5—12—33 மாலை கூடிற்று. கடவுள்வாழ்த்துடன் "கம்பர் பெருமை, புத்தகங்களின்பயன், சாவித்திரியின்கற்பு, மார்க்கண்டேயர், பக்ஷியின்கதை, ஈசுவரன் சர்வஜ்ஞன், ஈசுவரன் சர்வசக்திமான், நமது உடம்பின்தோல், ஔவையார்" என்ற அரிய பொருள்களை மாணவரும், கல்விப்பெருமை, சிறுவயதில் கற்கவேண்டிய அவசியம், பெற்றோர் கடமை, திரு. அ. பழனியப்பசெட்டியாரவர்களின் வித்தியா தருமவுணர்ச்சி யாதியவைகளைத் தலைவரும் பேசினார்கள்.

**திருத்தென்குடித்திட்டை:**—இம்மாதம் ௯௮௨ உதயத்திற்குமுன் நடராஜாபிடேகமும், உதயத்தில் திருவாதிரைத் தெரிசனமும், திருவுலாவும் நடைபெறும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

OFFICE OF THE ... 16 FEB 1934 MADRAS

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—மார்கழி | திங்கள் ரு.

உடையா ளுன்றன் நடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

### தண்ணளி மிக்க தமிழன்பர் மகாநாட்டினர்க்கு

## விநய விண்ணப்பம்.

சென்னைமா நகர்க்கண் திருமுக ஆண்டு மார்கழித் திங்கள் ௯, ௰ (23, 24—12—1933) சனி, ஞாயிறு ஆகிய இருகிழமைகளிற் கூடும் மகாநாட்டிற் செய்யத் தக்க உறுதிப்பாடுகளைப் பற்றித் தமிழ்ப்பேரறிஞர்களின் ஆய்வுரைகளையும், தமியேன் கருத்தையும் ஈண்டுத் தருகின்றேன்.

1. "தமிழ் நாட்டின் நடுவண் நீர்நில வளங்கள் செறிந்த சீரூரைத் தேர்ந்து, ஆங்கு ஓர் தமிழ்க் குருகுலம் அமைத்தல் வேண்டும்.

2. அக் குருகுலத்திற் றென்றமிழ் முதன்மை யாகவும், வடமொழி ஆங்கிலம் துணையாகவும் கொண்டு, நல்லொழுக்கம் கடவுள் வழிபாட்டின் நெறிமுறை பிறழாமல் மாணவர்கள் கல்வி பயிலச் செய்தல் வேண்டும்.

3- இரசாயனம், உயிர், உடம்பு முதலியவை பற்றிய அறிவுநூல்களைத் தமிழ்மொழியின் மூலமே பயிலத்தக்க வசதிகள் புரியவேண்டும்.

4. எளிய நடையில் உயரிய கருத்துக்களைப் புலப்படுத்தும் புதிய ஆராய்ச்சி நூல்களை வெளியிடல் வேண்டும்.

5. எளிய நடையென இலக்கணப் பிழையான நடைகளை யேற்காது திருத்தி யமைத்தல் வேண்டும்.

6. வடமொழி வேதாகமங்களையும், ஆங்கிலத்திலுள்ள (Science) அறிவு நூல்கள் முதலியவற்றையும் செவ்வியான குறிப்புகளுடன் தமிழுரை நடையில் வெளியிடல் வேண்டும்.

7. தமிழன்பர் மகாநாடு புத்தகவியாபாரம் **ஒன்றையே குறிக்கொள்ளா**மல், தமிழருக்கு இன்றியமையாது வேண்டும் **நூல்களை வெளியிடவும், அவைகளைச் சென்னை சைவசித்தாந்த மகாசமாஜத்தாரைப் போன்று இல**குவான விலைக்கு விற்கவும் செய்யவேண்டும்.

8. தமிழ்நாட்டுக் கிராமங்களிலுள்ள மக்கட்குப் பயன்றரத்தக்க நூல்கள் வெளிவரல் வேண்டும்.

9. உண்மைத் தமிழறிஞர்களுக்கு ஊக்கமுண்டாகும்படி ஆன்ற மதிப்பளித்தல் வேண்டும்.

10. மகாநாட்டிற் செல்வாக்குள்ள உறுப்பினர் தம்பயன் கருதித் தாம் விரும்பிய செயல்களை உறுதிப்படுத்தவிடாது, எவர்க்கும் பயன்றரும் செயல்களை உறுதிக்குச் கொணர்ந்து நிலைநிறுத்த வேண்டும்."

என, மகிபாலப்பதி பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களும்,

1. "இலக்கண வரம்பிகவாது தமிழ் மரபு வழுவாது நூல்கள் எழுதப்பெறல் வேண்டும்.

2. கணிதநூல், அளவைநூல், உளநூல், உயிர்நூல், உடல்நூல், வானநூல் ஆகிய கலைநூல்களைக் கற்பதற்குப் பண்பட்ட நுண்ணறிவு இன்றியமையாது வேண்டப்படுதலால், பள்ளியிறுதித்தேர்வு—நடுத்தரத்தேர்வு—உயர்தரத் தேர்வுகட்குரிய கலைநூல்கள் ஆங்கிலத்தி லெழுதப்படுவன போலத் தமிழில் உயர்நடையி லியற்றப்பெறல் வேண்டும்.

3. தாய்மொழியிற் புலமை சான்றவர்களின் துணைகொண்டு கலைநூல்களை யியற்றிக்கொள்ளல் வேண்டும்."

என, கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திருவாளர்: த. வே. உமாமகேசுவரம் பிள்ளை யவர்களும் ஆய்ந்தறிவித் துள்ளார்கள்.

மேற்கண்ட ஆய்வுரைகள் கருதியுடையனவே. அங்ஙனம் தமிழன்பர் மகாநாட்டில் அவைகளை உறுதிக்குக் கொணரவேண்டுவது இன்றியமையாததே. அவ்வாறு மகாநாட்டார் அவைகளை உறுதிக்குக் கொணர்வதுடன், செந்தமிழ் வளர்க்கும் நம் "சிவநேசன்" ஆண்டு—௭: திங்கள்—௧: செய்தித்திரட்டு முதற்பக்கத்தில் யான் குறிப்பெழுதி யிருப்பவைகளையும், திங்கள் ௪-ல் "தமிழன்பர் மகாநாடு" என்னும் தலையங்கத்துடன் எழுதியுள்ளவைகளையும் கூர்ந்து நோக்கி, நம் நாட்டின் கருவூலமாய்ப் பிறங்கும் பெருமையுள்ள தமிழ்மொழியைக் காப்பாற்றவும், போற்றி வளர்க்கவும் உறுதிப்பாடான முறைகளைக் கையாளவும் வேண்டும்.

மேலேகண்ட ஆய்வுரைகள் தமிழ்வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் போதியவைகளே என்றாலும், அங்ஙனம் மக்கள் குருதலத்திற் கூடி அருங்கலை பயின்று பெறும் பயன் யாதெனக் கருதிப் பயில்தற்கு முன்வராது பின்னிற்பார் பலராகின்றனர். ஆகவே, கற்றதனாலாய பயன் இறைவனது நற்றாள் தொழுதலே சாலுமெ



**னின், அஃது இகப்பற் றொருவி இறைவரைப் பற்றி** நிற்கும் பக்கு**வர்க்கே யமையும். அவ்வித பக்குவ முறுவோர் சிலரே யாவர்.** ஒரு **சிலர்மாத்திரம் மறுமைப்பயன் கருதிக் கற்கு மளவிலே, தமிழ் வளமிக்கோங்கிச் செழிப்புறுமா? என்பதை யாராயின், இம்மைப்பயன் கருதும் எல்லோரும் கற்க முன்வந்தாற்றான் தமிழ் வளரும் என்பது பெறப்படும்.** இம்மைப்பயன் கருதிக் கற்பவர்கள் பயன்பெறத் **தக்க வழிகள் அடைத்திருப்பதைத் திறந்துவைக்க** வேண்டியதே நம்முடைய முதற் கடமையாகும். பயன்பெறத் தக்க வழிகளெல்லாம் **ஆங்கிலக் கதவங்களா லடைக்கப் பட்டிருக்கின்றன.** எங்ஙனம் அடைக்கப்பட் டிருக்கின்றனவெனின்.—கிராம ஐக்கிய சங்கம், நகர பரிபாலன சபை, நாட்டாண்மைக்கழகம், மாநாட்டாண்மைக் கழகம், சட்டசபை ஆகிய தமிழ்நாட்டுப் பொதுஸ்தாபனங்கள், நீதிமன்றங்கள் ஆகியவைகளில் தமிழ்மொழி நுழைவைத் தடுத்து, ஆங்கிலக் கதவங்க ளடைக்கின்றன. அம்மட்டோ: வரி விதிக்கும் நிலையங்கள், பத்திரப்பதிவு நிலையங்கள், இந்துமத தரும பரிபாலன சபைகள், திருக்கோயிற் பரிபாலன சபைகள், திருக்கோயில்கள், திருமடங்கள் ஆகியவைகளிலுங் கூடத் தமிழ்மொழி நுழைவு தடுக்கப்பட்டு, ஆங்கிலக் கதவங் கடைக்கின்றதென்றால், தாய்மொழியாகிய தமிழ்மொழியை யெவ்விடத்து எவ்வாறு பயன்படுத்திக் கொண்டு அதனை வளர்க்கவும் காக்கவும் கூடுமென்பதே சிந்திக்க வேண்டியதா யிருக்கிறது. தமிழ்மொழி வளரவேண்டுமென்று வாயளவிற் பேசுவதோடு—அப்பேச்சை யேட்டி லெழுதி வைத்துவிடுவதோ டமையாது, செயல்முறைக்குக் கொண்டுவந்தாற்றான் தமிழ்மொழி தழைக்கும்; தமிழ்நாடு செழிக்கும். இவ் வளவிலே சுயராஜ்யமாகிய சுகப்பேறு பெற்றவர்களாவோம்.

அவைத்தலைவர் அவர்களே! அவையோர்களே! முடிந்த முடிபாகச் செய்யவேண்டிய தீர்மானம், மேலே காட்டிய பல்வகைத் துறைகளிலும், இன்னும் பல்வேறு துறைகளிலும் நடைமுறைகளிலெல்லாம் ஆங்கிலக் கதவங்களின் அடைப்பை யகற்றித் தமிழ்மொழியை முதன்மையாகக் கொண்டு வழங்கச் செய்யவேண்டும் என்பதே.

அங்ஙனமாயின் அனைவரும் தமிழைப் பேரார்வத்துடன் கற்க முன்னிற்பர்; அதனாலாய பயன் றுய்ப்பர். நம் தமிழ்நாடு நற்றமிழ் நாடாகத் திகழும். தமிழ் நிலத்தில் தமிழ்ப்பயிரே தழைத்து, அளப்பரு நன்மைகளைத் தமிழ்மக்களும் தமிழன்பர்களும் பெறுதற்குப் பெருந்துணையாகும். அவ்வண்ணமே யாக மகாநாட்டினர் மனங்கொண்டு உறுதிசெய்யவும், மகாதேவர் திருவருள் புரியவும் வேண்டுகிறேன்.

பலவான்குடி<br>9—12—1933. } ராம. கு. ராம. இராமசாமி செட்டி.

# நாடாளரசரின் நாட்டுமொழிப் பற்று.

பரோடா சமஸ்தானத்தில் இதுவரையும் ஆங்கில பாஷையே அதிகமாக வழங்கப்பட்டு வந்தது. இனி, இந்திப்பாஷையே அரசாங்க பாஷையாக எண்ணப்படுமென ஒரு அறிக்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. நீதிமன்றங்களில் வேலைபார்க்கும் நியாய துரந்தரர் கட்டாயம் இந்திப் பாஷையில் சித்தியெய்தினவரா யிருக்கவேண்டு மெனவும் அவ்வுத்தரவு கூறுகின்றது. அரசாங்கத்தின் எப்பகுதியில் உத்தியோகம் பெறுதற்கும் அப்பாஷை அவசியமாம். இந்திப்பாஷை இவ்வாறு பிரபல மடைந்து இந்தியாவின் தேசியபாஷையாக வேண்டுமென்பதே இந்தியத் தலைவர்களின் விருப்பம். ஆங்கிலபாஷை தற்போதடைந்துள்ள அந்தஸ்தை இந்திப்பாஷை அடைவதே வேண்டப்படுவதாம்.

## விடை.

('சிவநேசன்' ஆ—7:தி—2:ப—34: வினாவுக்கு விடை.)

திருப்பனந்தாள் சிவலிங்கம் சாயப்பெற்றதன்காரணம், 'தாடகை என்பாள் அகத்தியரிட்ட சாபத்தை நீக்கவேண்டி பிரமதீர்த்தத்தில் மூழ்கி சடையப்பரை அர்ச்சித்துப்பூமாலை சாத்தப்போஞ் சமயத்தில் உடைநெகிழ அதனைத் தம் இரு முழங்கையா லிடுக்கி மாலை சாத்தும் பணிக்கு இடையூறு வந்ததைக் குறித்துத் தாக்கித்தலையுணர்ந்த பரமன் திருமுடியைச் சாய்த்துக் கொடுத்து மாலைசாத்தப் பெற்றனராம். அக்காலம் சாய்ந்தலிங்கத்தைக் குங்கிலியக் கலயநாயனார் நிமிர்த்தினார். எனினும், தாடகையின் ஞாபகத்தின் பொருட்டு சற்று சாய்ந்ததைபோல காணப்படும்.' என்று ஈக்காடு, இரத்தின வேலு முதலியார் எழுதிய சரிதத்தால் விளங்குகிறது.

(தி. எ. சதாசிவம்)

## சுமித்திர சண்டேசுரர்.

(அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களவர்கள்.)

முன்னொருகாலத்திலே வசிட்டமுனிவரது கோத்திரத்திலே சுவர்ணாட்சர் என்னும் அந்தணருக்கு ஒரு புத்திரரிருந்தார். அவர் காசியை அடைந்து சுப்பிரமணியக் கடவுளை விதிப்படி பூசித்துத் தவஞ்செய்தார். கடவுள் தோன்றியருளி அவருக்குச் சுமித்திரரென்னும் நாமம்வைத்துத் தாமணிந்த மாலை முதலியவற்றைத் தரித்து, தமது சாமீப்பிய பதவியைக் கொடுத்துச் சுவேதகர் முதலிய கணங்களுள் ஒருவராகச் சேர்த்தருளினார்.

சிவாலயத்தில் சண்டேசுரரைத் தாபித்துப் பூசாந்தத்தில் அவரைப் பூசிப்பது போல், சுப்பிரமணிய ஆலயத்திலும் சுமித்திர சண்டரை ஸ்தாபித்துப் பூசித்தல் வேண்டும். (குமார தந்திரம், சுமித்திரஸ்தாபனவிதிப் படலம்.)

# சிவமகத்வம்.

(மஹரிஷிகளின் சமூகப் பிரசங்கம்)

(ஸ்ரீ உபய-வே- தீ. ஈ. ஸ்ரீநிவாஸாசாரிய ரவர்கள் மொழிபெயர்த்த அநுசாஸன பர்வம்* 49வது அத்தியாயத் திரட்டு.)

(பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.)

மஹாயோகியான வ்யாஸ முனிவர், தர்மராஜரைப் பார்த்து "புத்திரனே! மகேசுவரர் கிருபையினால் உனக்கு க்ஷேமமுண்டாகட்டும். மகாராஜனே! முன்னே நான் புத்ரோத்பத்திக்காக மேருமலையில் பெருந்தவம் செய்தபோது இந்த ஸ்தோத்திரத்தை (சிவஸஹஸ்ரநாமத்தை) முழுதும் சொன்னேன். பாண்டு புத்திரனே! நான் கருதினபலனையும் அடைந்தேன். அப்படியே நீயும் மகேசுவரரால் எல்லா விருப்பங்களையும் பெறுவாய்" என்றார்.

தேவரால் பூசிக்கப்பெற்றவரும் சாங்கிய சாஸ்திர ஞானியுமான கபிலமகரிஷி, "என்னாலும் அநேக ஜன்மங்கள் பக்தியோகத்தினால் ஆராதிக்கப்பெற்ற சிவபெருமான் அன்புவைத்து சம்சாரத்தை யொழிக்கும் தத்வஞானத்தை எனக்கு அளித்தார்" என்று சொன்னார்.

இந்திரனுக்கன்புள்ள நண்பரும் ஆலம்பாயனரென்று புகழ்பெற்றவரும் தயையே உருக்கொண்டவருமான சாருசீர்ஷரென்பவர் "ஓ! பாண்டுவின் மைந்தனே! முற்காலத்தில் நான் கோகர்ண க்ஷேத்திரத்தை யடைந்து நூறுவருஷகாலம் தவம்செய்து சிவானுக்ரகத்தினால் தாயின் வயிற்றிற் பிறவாதவர்களும் ஜிதேந்திரியர்களும் தர்மந்தெரிந்தவர்களும் சிறந்த பிரம்ம தேஜஸுள்ளவர்களும் மூப்புந் துயரமு மில்லாமல் நூறாயிர வருஷகாலம் ஜீவித்திருப்பவர்களுமான நூறுபுத்ரர்களையடைந்தேன்" என்றுசொன்னார்.

வால்மீகிபகவானும் "பாரதனே! நான் வேத விரோதமான வாதம் சொன்னபோது திரேதாக்கினிகளாலும் முனிவர்களாலும் 'நீ பிரம்மஹத்தி செய்தவனாவாய்' என்று சொல்லப்பட்டு ஒரு நிமிடத்திற்கெல்லாம் அந்தப் பாவத்தினால் பற்றப்பட்டேன். அப்போது நான் குற்றமற்றவரும் அடுத்தவரைக் கைவிடாதவருமான ஈசுவரரைச் சரணமடைந்தேன்; அதனால், அந்தப்பாவத்தினின்று விடுபட்டேன். என் துயரத்தை அழித்தவராகிய அத் திரிபுராரி என்னைப் பார்த்து 'உனக்குச் சிறந்த கீர்த்தி உண்டாகும்' என்றார்." என்றுசொன்னார்.

தர்மிஷ்டரிற் சிறந்தபராசரமர் ஜ்வலிக்கின்ற சூரியன்போல ரிஷிகள் நடுவிலிருந்து கொண்டு தர்மராஜரைப்பார்த்து 'பாண்டவர்களின் முதல்வனே! பிதாவுக்குச் சமமான தமையன்மார்களை வதம் செய்ததனால் துயரமுற்ற நான் பரிசுத்தனாகி மகாதேவரைச் சரணமடைந்தேன்; ஸஹஸ்ரநாமங்களைச் சொல்லி அவரை ஸ்தோத்திரம் செய்தேன். அதன்பிறகு அவர் சந்தோஷமடைந்தார். பிறகு, கோடாலியையும் சிறந்த படைகளையும் எனக்கு அளித்தார். 'உனக்குப் பாபம் இராது. யாராலும் ஜயிக்கப்படாதவனாவாய். உனக்கு மரணமும் வராது. மூப்பில்லாமலு மிருப்பாய்' என்று

---

* சென்னை:—கமர்ஷியல்பிரஸ் 1923ஆம் வருஷப் பதிப்பு.

சடைமுடியுள்ள அந்தச் சிவமூர்த்தியான பகவான் எனக்குச் சொன்னார். அந்த சர்வஜ்ஞருடைய அநுக்கிரகத்தினால் அவையெல்லாம் எனக்குக் கிடைத்தன'' என்று சொன்னார்.

விசுவாமித்திரர், ''நான் முன்னே க்ஷத்ரியனாயிருந்தேன்; பிராமணனாக வேண்டுமென்று சிவனை ஆராதித்தேன். அவருடைய அனுக்கிரகத்தினால் யாருக்குங்கிடைக்காத சிறந்த பிராம்மண்யம் எனக்குக்கிடைத்தது'' என்று சொன்னார்.

அஸிதர் என்னப்பட்ட தேவலர் தர்மராஜரைப்பார்த்து, ''குந்தி புத்திரனே! பிரபுவே! எனக்கு முன்னே இந்திரன் சாபத்தினால் தர்மம் அழிந்துபோயிற்று. அப்போது அந்தத் தர்மத்தையும், சிறந்தபுகழையும், தீர்க்காயுளையும் பிரபு கொடுத்தார்'' என்றுசொன்னார்.

இந்திரனுக்குப் பிரியமுள்ள சிநேகிதரும் ப்ருஹஸ்பதிக்குச் சமமான மகிமையுள்ளவரும் முக்காலமு மறிந்தவருமான க்ருத்ஸமதர் என்னும் ரிஷி தர்மராஜரைப் பார்த்துச் சொல்லலானார்:--''சிந்தைக்கெட்டாதவனான தேவேந்திரனுடைய ஆயிரம்வருஷம் நடத்தப்படும் ஸத்ரயாகத்தில் ரதந்தரமென்னும் சாமத்தை நான் உச்சரிக்கும்போது சாக்ஷுஷ மனுவின்புத்ரராகிய வரிஷ்டரென்னும் மஹரிஷி 'ஓ! பிராம்மண சிரேஷ்டரே! இது சரியாயில்லை. பிராம்மணோத்தமரே! பாபத்தைவிட்டு மறுபடியும் புத்தியினால் ஆராய்ந்துபாரும். மிகவும் கெட்டபுத்தியுள்ளவரே! யாகம் நிறைவேறுமலிருக்கும் (சொற்பிழையாலான ) பாபத்தை நீர் செய்திருக்கிறீர்' என்றுசொல்லித் திரும்பவும் மிக்க கோபத்துடன், 'ஞானமில்லாத நீர் பதினாராயிரத்து எண்ணூறு வருஷம் ஜலமும் காற்றும் இல்லாமலும் மற்றமிருகங்கள் சஞ்சரியாமலும் புள்ளிமான்களும் ஸிம்மங்களும் இருப்பதும் யாகத்திற்கு உதவாத மரங்களுள்ளதுமாகிய வனத்தில் எப்போதும் பயந்துகொண்டும் மிகத்துயரப்பட்டுக்கொண்டு மிருக்கும் ஒருகொடியமிருகமாகப் பிறப்பீர்' என்றுசொன்னார். 'தர்மராஜனே! அவ்வார்த்தை முடியும்போதே நான் விலங்காய்விட்டேன். அதன்பிறகு, சரணாகதனாக வந்தடைந்த என்னைப்பார்த்து யோகியான மகேசுவரர், நீ ஜரையும் மரணமும் துயரமும் இல்லாமலிருப்பாய்; எனக்கொப்பாக இருக்கக் கடவாய். உனக்குச் சௌக்கியமுண்டாகக் கடவது. நீயும் இந்திரனும் சேர்ந்து செய்யும் யாகம் விருத்தியாகக் கடவது' என்று சொன்னார். அந்தப்பகவானான பிரபு இவ்வாறே அனுக்கிரகங்கள் செய்வர். அவர்தாம் படைப்பவர். அவர்தாம் எப்போதும் சுகதுக்கங்களைப் பகுப்பவர். அந்தப் பகவானைச் செய்கையினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் எட்டமுடியாது. அப்பா! யுத்தத்திற்சிறந்தவனே! அதனால், வித்தையில் எனக்குச் சரியான பண்டிதனில்லை'' என்றார்.

அப்போதும் ஞானவான்களிற் சிறந்த கிருஷ்ணமூர்த்தி திரும்பவும் பேசலானார். ''பொன்னிறமான கண்களையுடைய மஹாதேவரை நான் தவத்தினால் சந்தோஷிக்கச் செய்தேன். யுதிஷ்டிரரே! அதன்பிறகு, அந்தப்பகவான் அன்புகூர்ந்து என்னைப் பார்த்து 'கிருஷ்ணா! என் அனுக்கிரகத்தினால் எல்லாருக்கும் தனத்தைவிட மிகவிரும்பத்தக்கவரும் யுத்தங்களில் தோல்வியடையாதவருமாவீர். உமது பராக்ரமம் அக்கிக்கு நிகராயிருக்கும்' என்று சொன்னார்; இவ்வாறு ஆயிரக்கணக்கான இன்னும் வேறு வரங்களையும் எனக்கு அளித்தார். பிறகு, மணிமந்தம் என்னும் மலையில்



முன்னே ஒருகோடியே ஆயிரத்துநூறு வருஷங்கள் என்னால் ஆராதிக்கப்பட்டார். அதன்பிறகு, அந்தப் பகவான் அனுக்கிரகம் செய்து என்னைப் பார்த்து, 'உமக்கு க்ஷேமமுண்டாகிறது. உமது மனத்திலிருக்கும் வரத்தைக் கேளும்' என்று சொன்னார். பிறகு, நான் தலையால்வணங்கி, 'ஈசுவரரே! மஹாதேவரும் பிரபுவுமான நீர் எனது சிறந்தபக்தியினால் ஸந்தோஷமடைந்திருந்தால் எனக்கு எக்காலமும் உம்மிடத்தில் பக்தி ஸ்திரமாயிருக்கவேண்டும்' என்று கேட்டேன். பகவானானவர், 'அப்படியே ஆகட்டும்' என்று சொல்லி அங்கேயே அந்தர்த்தானமானார்'' என்றார்.

ஜைகீஷவ்யர், ''யுதிஷ்டரா! முன்னே காசியில் என்னுடைய பெரிய மற்றொரு தவமுயற்சியினால் அணிமாமுதலிய எண்குணங்களோடுங் கூடிய ஸித்தியை எனக்குப் பகவான் அளித்தார்'' என்றார்.

கர்க்கர், ''பாண்டவா! சரஸ்வதி நதிக்கரையில் எனது மனோயாகமான (தியான யோகத்தினால்) ஈசுவரர் சந்தோஷமடைந்து அறுபத்துநாலு கலைகளிலும் ஆச்சரியமான ஞானத்தை எனக்குத் தந்தார். ஒரே விதமாக ப்ரம்ம நிஷ்டர்களாயிருக்கும் ஆயிரம் புதல்வர்களையும் அவர்களுக்கும் எனக்கும் பத்துலக்ஷம் வருஷம் ஆயுளையும் கொடுத்தார்'' என்றுசொன்னார்.

பராசரர், ''வேந்தனே! முன்னே சிவன் அநுக்கிரகம்பெறுவதற்காக அவரை மனத்தில் தியானம் செய்தேன். சிறந்த தவமும் சிறந்த மகிமையுமுள்ளவனும் மிக்கபுகழ்பெற்ற மகாயோகியும் எல்லாச் சிறப்புக்களுக்கும் இருப்பிடமும் பிரம்மநிஷ்டனும் தயையுள்ளவனுமாகிய இந்த வேதவியாஸனென்னும் புத்ரனை நான் மஹேசுவரரிடத்தில் வேண்டியிருக்கிறேன்' என்று என்மனோபாவத்தை யறிந்து, தேவசிரேஷ்டரான சங்கரர், 'பராசரா! என்னிடத்தில் வைத்த பக்தியின் பலனாக உனக்குக் கிருஷ்ணத்வைபாயனன் பிறக்கப்போகிறான். அந்த உனது புத்ரன் வேதங்களைச் சொல்வன்; (பாரதமாகிய) இதிகாசஞ்செய்து உலகத்திற்கு நன்மை செய்வன்; மூப்பும் இறப்பும் இல்லாமலிருப்பன்' என்றுசொன்னார். யுதிஷ்டிரா! மகாயோகியும் சிறந்த சக்தியுள்ளவரும் அழிவும் மாறுதலு மில்லாதவருமாகிய அந்தப் பகவான் இவ்வாறு சொல்லி அங்கேயே மறைந்தார்'' என்றுசொன்னார்.

மாண்டவ்யர், ''அரசனே! முன்னே நான் திருடாமலிருந்தும் திருடனென்று நினைத்துச் சூலத்தின்மேல் ஏற்றப்பட்டேன்; அங்கிருந்துகொண்டு மஹாதேவரைத் துதித்தேன். அவர் என்னைப்பார்த்து 'ஓ! பிராம்மண! நீ சூலத்திலிருந்து விடுபட்டு நூறு கோடி வருஷகாலம் ஜீவித்திருப்பாய். சூலத்தினாலுண்டாகும் நோய் இனி உனக்கு இராது. நீ மனக்குறைகளும் நோய்களுமற்றிருப்பாய். ரிஷியே! உனது தேகம் தர்மத்தின் நான்காவது பாத (மானஸத்ய)த்தினின்றுண்டானதால் நீ ஒப்பற்றவனாயிருப்பாய்; உனது ஜன்மத்தைப் பயன்படும்படி செய்துகொள்வாய்; இடையூறின்றி எல்லாப் புண்ணிய தீர்த்த ஸ்நானங்களையும் பெறுவாய். ப்ராம்மண! பிறகு, அழிவில்லாத ஸ்வர்க்கத்தையும் நிச்சயமாக ஏற்படுத்துகிறேன்' என்று சொன்னார். மகாராஜனே! சிரேஷ்டரும் விருஷப வாகனரும் தோலாடையுடுத்தவரும் பேரொளியுள்ளவரும் தேவசிரேஷ்டரும் பகவானுமாகிய மகேசுவரர் இவ்வாறு சொல்லிப் பிரதமகணங்களுடன் கூட அங்கேயே அந்தர்த்தானமானார்'' என்றார்.

காலவர், "நான் (குருகுலவாசம் செய்தபிறகு) விசுவாமித்திரரால் விடைகொடுக்கப்பெற்றுத் தகப்பனாரைப் பார்க்கவந்தேன். அப்போது என்தாய் என்னைப் பார்த்து. மிகுந்த துயரத்துடன் அழுதுகொண்டு 'குழந்தாய்! குற்றமற்றவனே! உன்னை உன்தந்தை பார்க்கவில்லையே' என்று சொன்னாள். தாய் சொன்னதைக் கேட்டபிறகு தந்தையைப் பார்ப்பதில் ஆசையற்றவனாய்த் தவம்செய்து மகாதேவரைப் பார்த்தேன். அவர் என்னைப்பார்த்து. 'புத்ரனே! உன் தந்தையும் தாயும் நீயும் மரணமில்லாமலிருப்பீர்கள். உடனே வீட்டிற்குப்போ. உன்தந்தையை வீட்டில் பார்ப்பாய்' என்று சொன்னார். அன்பனே! யுதிஷ்டிரா! வீட்டிற்குச் சென்றபோது பிதாவைக் கண்டேன்" என்றுசொன்னார்.

இவ்வாறு ஈசுவரருடைய மிக்க ஆச்சர்யமான செய்கைகளை ரிஷிகள் சொல்லக்கேட்டுத் தர்மராஜர் வியப்புற்றார்.

## கிருஷ்ண பலராமர் எவற்றின் அவதாரங்கள்?

(பாரதம் ஆதிபர்வம் 214-வது அத்யாயம்.)

"திருமாலானவர் ஒன்று வெண்மையும் மற்றொன்று கருமையுமாகிய இரண்டு கேசங் (மயிர்)களைத் தலையிலிருந்தெடுத்தார். அந்த இரண்டு கேசங்களும் தேவகி ரோகிணி யென்னும் இரண்டு யாதவகுலத்து ஸ்திரீகளின் கர்ப்பங்களில் பிரவேசித்தன. அந்தத் திருமாலினுடைய அவ்விரண்டு கேசங்களில் வெண்மையா யிருந்தவொன்று பலராமனாகப் பிறந்தது. இரண்டாவது கறுத்த நிறமாகச் சொல்லப்பட்ட கேசம் கேசவனாகப் பிறந்தது." ஆகவே கிருஷ்ண பலராமர் விஷ்ணுவின்ரோமாவதாரங்களாதல்காண்க.

---

## முட்டை.

மரக்கறியுணவருந் தஞ் சாதியார்களிற் சிலர்க்குச் சிலகாலமாகக் கோழிமுட்டை தின்ன ஆசை ஏற்பட்டிருக்கிறது. சிலர் தின்பதாகவும் கேள்வி. "முட்டையில் உயிரில்லை: உண்டெனக்கொண்டாலும் முட்டையை உடைக்கும்போது அவ்வுயிர்க்குத் துன்பம் நேராது: ஆகலின், முட்டைத்தீனி ஜீவஹிம்சை யாகாது: தேர்ந்த மருத்துவர் முட்டையைச் சாகமென்றுஞ் சொல்லுகின்றனர்."எனப் பிரசங்கித்து அத் தின்னிகள் அத்தீனியை ஆசாரமாக்கவும் பார்க்கின்றனர்.

முட்டையில் உயிரில்லாவிட்டால் குஞ்சு வெளிப்படாது. முட்டை மாமிச சம்பந்தமுடையது. அஃது உயிரற்றதானால் பிரேதத்துக்குச் சமம். ஆகலின், முட்டைத்தீனி பிணத் தீனியாகும். மனிதனுக்கு மயக்கமருந்து கொடுத்து அவனைக் கொன்றால் அவனுயிர் துன்புறாது. அக்கொலை ஜீவஹிம்சையுமாகாது. ஆகலின், மனிதனையும் கொன்று தின்ன முட்டைத் தீனி துணிவுண்டாக்கும். அண்டஜம், சுவேதஜம், சராயுஜம், உத்பீஜம் என்னும் நான்கில் முதன் மூன்றையுந் தின்பது மாமிசபக்ஷணம். உத்பீஜவுணவொன்றே சாகபக்ஷணம். முட்டை மாமிசத்திலிருந்து வந்தது; மாமிச பிண்டமாய் மாறுவது. அப்படி முன்னும் பின்னும் மாமிசமாகிய முட்டை இடையில் சாகமாவது சிறிதும் ஏலாது. ஆகையால், முட்டைத்தீனி ஆசாரவுணவாகா தென்பதை அத்தின்னிகள் இனியாயினுந் தெளிக.

மே. குப்புசாமி பிள்ளை.

# திருவாதிரைத் திருநாள் மகிமை.

---

(திருவல்லிக்கேணி திரு. நல். கண்ணப்ப முதலியாரவர்கள்)

திருச்சிற்றம்பலம்.

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.

திருச்சிற்றம்பலம்.

(1) ஸர்வக்ஷேத்திர ஸார்வபௌமனாகிய ஸ்ரீசிதம்பரசிவராஜயோக பரமாகாச மீதானவெளியில் காலதேசவஸ்து நாமரூப பரிச்சேத வியவகாரோபாதிகளெல்லாம் ஒடுங்கக் கேவலம் சிவமேயாயிருந்த பரமைகாந்த தமோரூபமாகிய மகாப்பிரளயமென்னும் ராத்திரியில் ஆதி-பரை-இச்சை-ஞானம்-கிரியை என்னுமைந்தாய், மனோன்மனி, சர்வபூததமனி, பலப்பிரமதனி, பலவிகரணி, காளி, ரௌத்திரி, ஜேஷ்டை, வாமை என்னும் ஒன்பதாய், இன்ன பலதாரத்தவாய் விரிந்த சிவனது பஞ்சகிருத்திய காரண சத்திகளாகிய பெண்களெல்லாம் கிருத்தியத்தில் விமுகைகளாய்ச் சிவத்தில் ஒடுங்கிக்கிடந்தவர்கள், அவ்விராத்திரி முடிவாகிய விடியற்காலமாக அப் பஞ்சகிருத்திய நினைவுவந்து கிருத்தியோன்முகைகளாய் மஹாசகல மென்னும் பகல் முகத்தில் சிருஷ்டியாரம்ப காலமென்னும் மார்கழித் திங்கள் பஞ்ச பஞ்ச உஷத்காலையில் கிருத்தியவைமுக்கிய மென்னும் உறக்கந் தவிர்த்துச் சுழுமுனா நாடி என்னும் வீதியில்வந்து கிருத்திய ஔந்முக்கியமென்னும் விழிப்புளதாமாறு "மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி" என்னும் நாத தத்துவப் பேரொலி யெழுப்பிச் சேட்ட கனிட்ட முறையால் ஒருவரையொருவர் விழிப்பிப்பராய்க் கிருத்திய காரணேஸ்வரர்களாய்ச் சிவாம்ஸபூதர்களாகிய தத்தம் நாயகர்களுக்குக் கிருத்திய காரணேஸ்வரிகளாய்ச் சத்தியம்ஸ பூதைகளாய் நாயகிகளாகிய தாம் அவ்வந்நாயகர் குறிப்பின் வழுவாத அருங்கலக் கற்புப் பெருங்குல நலம்பேணிக் கிருத்திய யோக்கியதை தமக்குளதாமாறு சிவகங்கை யென்னும் பங்கயப் பூம்புனல் பாய்ந்தாடுவாராய் "ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ் சோதி" யிற்றொடங்கிப் "போற்றியோ மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்" என்று முடித்துத் திருவெம்பாவைத் திருவாதிரைச் செல்வத் தெய்வச் சைவத் திருநாளாகும்.

(2) அம் மார்கழித்திங்களில் ஸ்ரீமத் பதஞ்சலி வியாக்ரபாதர்கள் மூவாயிர முனிவர்கள் சேவிக்கச் சிற்சபையாகிய பொற்சபைநடுவே நின்று பரமாநந்தத்தாண்டவஞ் செய்தருளும் சிவகாமசுந்தரீவல்லப நடராஜ ராஜேஸ்வரர் தத்துவம் முப்பத்தாறும் புவனம் இருநூற்றிருபத்து நான்குந் தழைத்தினிதுவாழ அட்டதிக்கும் கொடிகட்டித் துவஜாரோகணப் பிர்மோத்சவங் கண்டு எப்புவனங்களும் நிறைந்த தமது திருத்தில்லைத் திருநகர்ச் "சிவமே

நிலவிய திருவீதி'யில் மஹாமங்களமஹோத்ஸவப் பவனிகொண்டருளும் திரு
வெம்பாவைத் திருவாதிரைத் திருமஞ்சனத் திருநாளாகும்.

(3) "ஆரார் வந்தா ரமரர் குழாத்தி லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க டிசையனைத் துந்நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே"

என்னும் பிரமாணப்படி நந்திமுதலிய பிரமதகணங்கள் எங்கள் நிருத்தா
னந்த ராஜாதி ராஜ சேகர சர்வலோக சக்கரவர்த்தியார் அணியுடை யா
திரை நாளில் தில்லைச்சிவராஜதானி ராஜவீதி மீதானவெளியில் ராஜ ஒய்
யாரத் திருவுலாக்கொண்டருளப் புறப்படுஞ்சமயம் இதோ ஆயிற்று! இதோ
ஆயிற்று!! என்று எச்சரிப்பாளர்களாய் நாராயணன் நான்முகன் அக்கினி
சூரியன் சந்திரன் இந்திரன் முதல் ஈசானன் முடிவான திக்குப்பாலகர்கள்
அவரவர்களுக்குரிய திக்குவிதிக்குக்களில் மார்ஜ்ஜனபுரோக்ஷண ரங்கவல்லீ
நிர்மாண லாஜ விகிரண பூரணகும்ப ஸ்தாபன சூதபத்ர புண்டரேக்ஷுக்
கிரமுக கதலீவிருக்ஷ தோரண விதான ஸ்தாபன சுகந்த மகரந்த மது
பிருந்த சுவர்ணரத்ந புஷ்பமாலாலங்காராலங்கரண கந்ததூப நீராஞ்சன
சமர்ப்பண நிர்த்தகீத நாராயணமிருதங்க நந்திதாள நீலலோகித மஹா
ருத்திர விஸ்வாவசு பிருகதீ தும்புரு கலாவதீ நாரத மஹதீ சரஸ்வதீகச்
சபீ வீணாகான ராஜகோபால வேணுகான கடசல்லரீப் பிரமுக வாத்ய ஸ்ர
தன ஆர்யதிராவிட வேதகாந ஸ்வாகதார்க்யப் பிரதான ஸ்தோத்திர வந்த
னு நந்தனப் பிரஸாதனரூப ராஜகைங்கர்ய வீதி பரிஷ்காரம் செவ்வே
கொண்டுய்க்கின்றார்களா! அல்லவா? அவ்வமரர் குழாத்தில் ஆரார்வந்தார்?
ஆரார் வரவில்லை என்று சிக்ஷாரக்ஷகர்களாய்க் கைப்பிரம்பு கொண்டு சடிதி
பார்ப்பார்களாக. அவ்வமரர் குழாங்கள் அங்ஙனம் வீதிபரிஷ்காரஞ் செய்து
ஆயுதபாணிகளாய்க் கண்ணிமை கொட்டாது தத்தம் வீதி காவல்புரிந்து
நிற்ப, அத் தேரார் வீதியில் தேவர்குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும் பல்லாண்டு கூறும் மார்கழி நீர்த் திரு
வெம்பாவைத் திருவாதிரைத் தெய்வத் திருநாளாகும்.

(4) எங்கள் நடராசர் நாம் இவரி லொருவரெனும் தில்லை மூவாயிர
வர்களுள் இரண்யகர்ப்ப பூஜ்ஜபர்கள், திருத்தொண்டத் தொகையில் அக்ரகண்
யர்களாய் நின்ற வைதிகசைவத் திருமறையோர்,

"நீலத்தார் கரிய மிடற்றார் நல்ல நெற்றிமேலுற்ற கண்ணினார்பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம்"

என்றபடி எங்கள் சண்பையர்கோன் சிவயுவராஜ சக்ரவர்த்தித் திரு
மகனார்க்குத் தமது ருத்திராவதாரத் தெய்வக் கோலங்காட்டி அவர்தமது
செந்தமிழ்த் தெய்வத் திருமறையில் தங்களை அங்ஙனம் வைத்தேத்த நின்ற
தெய்வ விப்ர பூஜ்யபாதர்கள் திருவுடையந்தணர்கள் தமது யாகஹோம
தூமபடலம் விண்மிசை யெழ, அதன் பலமாகிய ஜலதர மேகபடல வர்ஷம்
மண்மிசை விழக் கலியா னலியாது மூவுலகுங் காத்துச் சிவத்தைப்பேணித்
தமது தவத்துக்கழகுசெய்த சிவதுல்ய நிறைசெல்வச் செருக்கர்கள் வாழும்
தில்லைத் திருநகர்ச் செல்வத் திருவீதியில் அவரவர் திருமாளிகை வாசல்



தோறும் எங்கள் பரமானந்த தாண்டவ மூர்த்தியார் வந்து ஈரேழு பதி
னுன் குலங்கட்கும் காட்சிதந் தருள்வாராய்த் திருவெழுச்சி கொண்டரு
ளும் திருவெம்பாவைத் திருவாதிரைத் திருமலி செல்வக் குருமலி சீர்த்தித்
திருநாளாகும்.

(5) பிர்மா-விஷ்ணு-ருத்திரன்-மகேஸ்வரன்-சதாசிவன்-பிந்து-நாதம்-
சத்தி- சிவம் என்னும் நவந்தரு பேதங்களும் தன்கட் டோன்றிநின் றொ
டுங்கும் துவாதசாந்த ஹிருதய பரம வியாபக சிதம்பர சுழுமுநா நாடி
ராஜவீதி மீதானவெளியில் எங்கள்சிற்சபாநாயகர் பிரசந்நஞான சிவபோக
சிருங்கார நாயகராய் விஜயஞ் செய்தருள அவர்க்குத் திருவாசகத் தென்ன
முதந் தந்த சிவபோக சுகசிருங்கார நாயகியார் ஸ்ரீமந் மணிவாசக தயாநிதி
யார் பின்காட்டாது குறுநடை அருளுலாக்கொண்டு சேவித்து முன்வரும்
சிதம்பர ரஹஸ்ய சுத்தாத்துவித சிவபோக சுரத கலாவிர்ப்பாவ மகிமைத்
திருவெம்பாவைத் திருவாதிரைச் செல்வத் துரைத்தனத் தெய்வத் திருநா
ளாகும்.

(6) எங்கள் நிறைசெல்வத் திருவுடை யந்தணர்கள் சர்வலோகாசார்
யர்களில் ஒருவர் மெய்கண்ட சந்தான குலப்பிரதீப சித்தாந்த துரீயபீடா
திபதியார் ஸ்ரீமத் பௌஷ்கர சம்மிதா பாஷ்யகாரர் சித்தாந்தத் திராவிடப்
பிரகரணாஷ்டகப் பிரணேதா ஸ்ரீமத் சத்தியோ முத்திப்பிரதர் கொற்றவங்
குடி ஸ்ரீமத் உமாபதி சிவாசார்ய தீக்ஷிதபகவத் பூஜ்ய பாதனார் தமது நடரா
ஜரும் தாமும் ஒன்றாய் விரவிநின்ற உறவு கனவு வெளியாகக் கொடிக்கவிபா
டிக் கொடியேற்றி உற்சவங் கொள்விக்க எங்கள் நடராஜராஜர் ஒன்பதாந்
திருநாளில் சீரார் திருவீதியில் தேரூர்ந்துவரும் திருவுலாக் கொண்டு பத்
தாந் திருநாள் உஷத்காலையில் ஸஹஸ்ரதள பத்மப்பிரமமந்திரரூப ஆயிரக்
கால் மண்டப ராஜ சபையின்கண்ணே ஜீவர்களெல்லாம் ஆனந்தமாக்கட
லில் ஆடி ஆராவின்பந் திளைக்கத் திருவபிஷேகங்கொண்டு ராஜவோலக்
கத் தமர்ந்தருளும் மார்கழித் திருமஞ்சனத் திருவெம்பாவைத் திருவாதி
ரைத் திருநாளாகும்.

(7) எங்கள் நடராஜ ராஜ சாம்ராஜ்ஜியச் சக்கரவர்த்தியார் தமது
பேரம்பலப் பொதுவார் இட்டசட்டப்படி பகல் இரண்டுமணி யளவில் ரா
ஜசபையினின்றும் சர்வலோக சக்கரவர்த்தினியார் சிவகாம சுந்தரியோடு
தமது அநந்தானந்த காருண்ய கிரணகலாபக மநாக மனோபய கேளிகாபய
நடன சரஸோல்லாச விலாசச் செல்வத் திருவுலாக்கொண்டு பஞ்ச துந்துபி
கள் விண்ணிலும் பதினெண்வாத்தியங்கள் மண்ணிலும் முழங்க உபயவேத
சாமகானகோஷமத்தியில் விண்ணவர்களிலும் மண்ணவர்கள் முன்னின்று
சேவிப்பத் தமது திருமுகமண்டலக் குறுவேர்வை நீங்கத் திருவுடையந்த
ணர்கள் தாளவிருந்த சேவை செய்துவரப் படிவிட்டிறங்கிப் பந்தர் நடுவே
வந்து ஓராவிர்த்தி தமது சிவகங்கையை மேன்முகநோக்கிக் கடாக்ஷவீக்ஷ
ணம் செய்து தீர்த்தங்கொள்வித்துத் தென்முகாபிமுக ஸந்முக சர்வஜ்ஞன்
மோகனராய்த் தமது ஆடியபாத நாடகக் காட்சியைப் பூரிதானமாக எவ்வு
யிர்களுக்குங் கண்விருந்தளித்துத் தமது பொற்சபையாகிய சிற்சபைக்குள்
அபிநிவேசப்பிரவேசம் செய்யும் திருவெம்பாவைத் திருவாதிரைச் செந்தி
ருப் பொலிசீர்ச் சுந்தரத் திருநாளாகும்.

(8) எங்கள் சிவ சைதன்ய சுகநாயகர் மணிவாசகப்பெருமானார் சபைமுன்வந்து திருவெம்பாவையைப் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்த அவரைப் புலிமுனியும் பதஞ்சலியும் திருவுடையந்தணர்களும் மாஹேஸ்வரர்களும் சற்கார சமற்கார வந்தனோபசாரஞ் செய்து அவர்க்குப் பல்லாண்டு கூறத் திருவுடையந்தணர்கள்பால் நடன பரிவட்டமும் மாலையும் சாத்தும் பரிகலசேடப் பூஜை கொண்டருளி நடனானந்தாமிர்தந் துய்த்துத் தமது பேரம்பல மகாசபைக் கெழுந்தருளும் திருவெம்பாவைத் திருவாதிரைச் சீரார் கீர்த்திப் பேரார் திருநாளாகும்.

(9) எங்கள் நடராஜ ராஜராஜ யோகராஜ போகராஜ தயாநிதியார் அந்நாள் தேவர்களிட்ட கொடிய ஆலகாலமும், வேடனிட்ட எச்சிலிறைச்சியும், மதுரைச் செம்மனச்செல்வி நரைமூதாட்டி யிட்ட உதிர்பிட்டமுதும், எங்கள் திருவுடையந்தணர்க ளிட்டுவரும் தேவாடைபடைத்த பாவாடைப்பூரியமுதும் தமக் கேன்றுகொள்வதோடமையாது சேந்தனாரது தவக்களிப் படைத்த சுவைக்களியமுதும் தமக்கு நாலாறு மின்சுவை படைத்து நெஞ்சகத்ததாகத் தாம் அவர்தம் பக்திவலையிற் சிக்கி அதனை அச்சேந்தனார முதிடக் கொண்டு அவர்க்குத் தமது அருளமுதக் களிதந்து அக்களியமுதைத் தம்மால் உலகம் ஆராவின்பப் பேராவமிர்தமாகக் கொண்டு பத்திச்சுவைபடைத்த முத்திக்களி கொள்ளுமாறு அதனைத் தமது திருமணி மன்றிற் பெருமணி முன்றிலெங்கும் பரப்பிப் பத்தர்க்கெளிவந்த சித்தராய்ப் பரம நாடகம் காட்டியருளிய மார்கழித் திருவெம்பாவைத் திருவாதிரைச் சேந்தன்களித் திருநாளாகும்.

(10) எங்கள்நடராஜராஜர் தமது தில்லையாரண்யத்தில் இரண்யவன்மசோழபூபதியால் ஆலயமும், பதஞ்சலி பகவானால் பூஜாவிதானமும் திருவுடையந்தணர்களால் பூஜையும் அமைத்துத் தமது பொன்னம்பலக் குடிவாழ்க்கைக்குக் காரணமாய்நின்ற புலிமுனிபெற்ற குலமுனியாய பாலகன் பசிமீதூர்ந்து பால்வேண்டியழுதிட அவனது சிவசைதன்ய சமவியாபகோதரோஜ்வலித சிவபோக திருஷ்ணாதிசய ரூபஞான சடாக்கினிப் பிரசமனாநுரூப பரிணாமமாகத் திருமகளும் திருமகணாயகனும் கல்பதருவும் அமிர்தமும் சிந்தாமணியு மென்னும் சர்க்கரையும் கற்கண்டும் கதலிபலமும் மதுரமும் திராக்ஷபலமு மிவை சேர்ந்த மகத் பரிமாணத் திருப்பாற்கடலை அழுகைதீர்த்தருள அதனை நிறைய முகந்த அருட்சூற் கொண்டலாய் சிதம்பர பரமாகாச வெளியிற்பரந்து சுழுமுனை நாடிப் பரங்குன்றத் தும்பாகலையுச்சியிற்படிந்து அந்நாள் பாற்கடலுண்டிச் சர்க்கரையில் எறும்பெனவெளிவந்த பகவான் நாராயணனுக்கு அளித்த அருள் வரத்தானே அவனே அவதீர்ணனாய் வந்தபகவான் கண்ணனென்னும் காராளனுவப்ப வைதிக சைவ சித்தாந்த சிவாகம தத்துவார்த்த வருஷம் பொழிந்து அவனது மாதவப் பந்திமாமலைச் சாரலால் ஆகமாந்த உபதேச அருவிநீர் பெருக்கி அவனது சுத்தாந்தக்கரண சித்தபூமியில் சிவபோகம் விளைவித்துச் சிரானனென்னும் ஏராளனாய் அவனினிது வாழவும், இன்னும் திருத்தொண்டத்தொகைப்பத்தவிலாசத் தென்னமுத மழைபொழிந்து தொண்டர்களென்னமென்னும் கால்களிற் பாய்ச்சி அவர்கள் ஏகபோக சிவபோக விளைவைக் கண்டு முதல்செய்து [illegible] ஆன்மசிற்சத்தியும் சுத்த சாத்விக சித்தவிர்த்திகளுமென்னும் மனைவிமக்களோடு இன்பம் துய்த்து இனிது வாழவும், குடி



வைத்த குலபதி வியாக்கிரபாத போதவையாக்கிரபாத உபமந்யு ஜ்ஞான புஷ்கலாவர்த்தம் திருவுடையந்தணர்களென்னும் வைதிக சைவவுழவர்கள் சுருக்குச்சுருவமென்னும் லாங்க லோபஜீவிகளாய் அக்கினி ஹோத்திரமென்னும் கிருஷி செய்து குஞ்சிதசரண சிவபோக விளைவுகொண்டு உலகமுண்ணவமுதளிக்கும் நிறைசெல்வக் கொடைவள்ளல்களாய் வாழுமாறு அவர்கள் மூவாயிரவர்கட்கும் பங்காய் நான்மறை வரம்புகட்டிய சிதம்பரக்ஷேத்திரத்திலே ஞான மும்மாரி பொழியும் மார்கழிநீர்த் திருவெம்பாவைத் திருவாதிரைத் திருவளர் செல்வத் திருவளர் திருநாளாகும்.

(11) சிதம்பர பரமாகாச கங்கையே சத்திநிபாதர்களென்னும் சகாரர்கள் ஈடேற அவர்களது அஞ்ஞான விருத சுஷ்கபோதமென்னும் எலும்பிற்பாயுமாறு திரிபதகையாய்ப் பூமியில்வந்து நீசகுலமென்னும் பாதலத்தில் விழுந்து திருநாளைப்போவாரென்னும் நாமரூபம் படைத்த பாதலகங்கையாய்ச் சிவனருட் பெருமழை சகலகேவல அகோராத்திர அநவச்சின்ன தாரையாய்ப் பொழிந்த சேர்க்கையால் தனது கல்லோல கல்லோல சிவானந்த வெள்ளப் பெருக்கெடுத்து ஊர்த்துவகாமினியாய் நாமரூப ஜாதி மாயா கல்பனைக் கரைபுண்டு தத்துவ முப்பத்தாறும் படிகடந்தேறித் தனது ஷடத்துவாதீத யதாஸ்தானம் விளிம்புமுட்டித் திருவுடையந்தணர்களென்னும் வைதிக சைவ உழவர்கள் சுருக்குச் சுருவலாங்க லோப ஜீவிகளாய் அக்கினி ஹோத்திரமென்னும் கிருஷி செய்து குஞ்சிதசரண சிவபோக விளைவுகொண்டு உலகமுண்ண அமுதளிக்கும் சிதம்பரக்ஷேத்திரத்திலே பரமபாவன காவேரியாய்ப் பாய்ந்து திருநாளைப் போவாரென்னும் தனது திருநாமம் பெரும்புகழ்ப் பெருவெள்ளப்பெருக்கும் மார்கழிநீர்த் திருவெம்பாவைத் திருவாதிரை நந்தனாநந்த சுந்தரத் திருநாளாம்.

"திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரவாகம்" என்னும் மைட்டிலில்லாச் சிறுசுவடியிலிருந்து பலருக்கும் பிரயோசனப்படுமாறு வெளியிட்டாம். அப்புத்தகத்தின் மற்றைய பகுதியும் பின்னர் வரைவாம்.

# தாலி.

சுப்ரபேதாகமத்திலுள்ள கிரியா பாதத்தைத் திருவானைக்காப் புராணத்துக் கோச்செங்கணார் வழிபடுபடலம் தமிழ்ப்படுத்தி வைத்திருக்கிறது.

"இலகொரு மருப்ப னைமலர்க் கமல மெனவெழிற் சிவலிங்க மெனச்செய், தலரொளி யரும்பைத் திழைத்துறு துணைபா லாக்கிமற் றதனிடை யிரண்டு, குலவிய கனகக் கயிறுகோத் ததுதான் கோதின்மங் கிலியமாங் கண்டாய், மலர்தலை யுலகம் வியத்தரு மன்றல் வரவினைப் புகலுதுங் கேளாய்."

என்பது அப் படலத்தின் 150-வது பாசுரம். கலியாணத்தில் மணமகள் கழுத்தில் மணமகன் கட்டுந் தாலி, பிள்ளையார், தாமரைப்பூ, சிவலிங்கவடிவங்களில் ஒன்றாயிருக்கவேண்டு மென்பது அதன் பொருள். தென்னாட்டுச் சைவவேளாளகுலம் முதலிய சிலகுலத்துப் பெண்டிர் கழுத்திற் பிள்ளையாரின் பொன்னுருத் தாலியாய் விளங்குவது இன்றும் பிரத்தியக்ஷம். ஆனால், இக்காலத்தில் அக்குலங்களிற்றானே யுள்ள சு-ம-க்கள் தாலியை ஆண்குறிவடிவென நிந்திக்கின்றனர். அவர் புத்தியே அதுவாயிருத்தலின், அந் நிந்தைக்குப் பிறர் வருந்தல் வேண்டும்? (சு. ஈ.)

186934

உ

# கடை யெழு வள்ளல்கள்.

கோநகர் திருவாளர் சு. மு. இராமசுப்பிரமணியன் செட்டியார்.

"வள்ளல்" என்போர், தமக்கு இடையூறு உண்டான காலத்தும் அதனைப் பொருட்படுத்தாது இரப்பவர்க்கீயுங் குணமுடையவராவர். நம் நாட்டிலிருந்த வள்ளல்களை, தலை யெழு வள்ளல்கள், இடையெழு வள்ளல்கள், கடையெழு வள்ளல்கள் என மூன்று பிரிவாகப் பிரித்திருக்கின்றனர். அவர்களுள், பாரி, ஆய், அஞ்சி, நள்ளி, மலையன், பேகன், ஓரி எனுமெழுவர், கடையெழு வள்ளல்களெனப் படுவர்.

பாரி என்பவன், பறம்புமலை எனப்படும் பிரான்மலைக்கும் அதைச்சார்ந்த முந்நூறு ஊர்களையுடைய பறம்பு நாட்டிற்கும் தலைவன். ஒருநாள் காட்டுவழியே செல்லும்பொழுது ஓர் முல்லைக்கொடி கொழுகொம்பில்லாது துவள்வது கண்டு, தன்னுடைய தேரை அக்கொடிக்குக் கொழுகொம்பாக நிறுத்திவிட்டுத் தன் அரண்மனைக்கு நடந்து சென்றவன். தனது ஆட்சிக்குக் கீழ்ப்பட்டனவாகிய முந்நூறு கிராமங்களையும், பரிசு விரும்பித் தன்னிடம் வந்தவர்களுக்குக் கொடுத்தவன். மூவேந்தரும் ஒன்றுகூடிப் போர் செய்தும் வெல்ல முடியாத பலமுடையவனாயிருந்தவன். அதனால், மூவேந்தர்களும் இவனை வஞ்சித்துக் கொன்றனர். இவனுக்கு உயிர்த்தோழராகவும் சமஸ்தான வித்வானாகவுமிருந்தவர் கபிலர். இவனை வேள்பாரி எனவும் கூறுவதுண்டு.

ஆய் என்பவன், பொதியமலைக்குப் பக்கத்திலுள்ள ஆய்குடியில், வேளாளர் குலத்திலுதித்தவன். இரப்பவர்க்குச் சந்தனமும் யானைக்கொம்பும், குதிரையும், தேரும், கிராமங்களும் கொடுத்தவன். இவனுடைய மலை எதிரிகளால் தாக்கமுடியாத வல்லமையுடையது. கொங்குநாட்டாரோடு சண்டைசெய்து அவர்களை மேற்கடற்பக்கம் துரத்தியவன். ஓர் நீலநாக மளித்த ஆடையொன்றைச் சிவபெருமானுக்குக் கொடுத்தவன். பல மாதர்களை மனைவியராகக் கொண்ட இவன் இறந்த காலத்து இவனது மனைவியரனைவரும் தீப்பாய்ந்தனர். இவனுக்கு உயிர்த் தோழராகவும், சமஸ்தான வித்வானாகவுமிருந்தவர், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார். இவனை ஆய்அண்டிரன் எனவும், அண்டிரான் எனவுங் கூறுவதுண்டு.

அஞ்சி என்பவன், தகடூரில் வாழ்ந்தவன். குதிரைமலை இவனுடையது. யுத்தத்தில் பேர்பெற்றவன். உண்டவரை நீண்டகாலஞ் சீவித்திருக்கச்செய்யும் கருநெல்லிப்பழம் ஒன்றையும், போர்த்துக்



கொண்டவரை இளமை மாறாதிருக்கச்செய்யும் பீதாம்பரமொன்றையும் ஔவையாருக்குக் கொடுத்தவன். இவன் முன்னோர், தேவர்களை வேண்டிக் கரும்பு பெற்றுப் பூமியில் பயிரிடச்செய்தனர். காஞ்சிநகரத்திருந்த தொண்டைமான் என்னும் அரசனிடம் ஔவையாரைத் தூதனுப்பினவன். இவனை அதிகமானெடுமானஞ்சி யெனவும், அதியமானெடுமானஞ்சி யெனவும், நெடுமானஞ்சி எனவும் கூறுவதுண்டு.

நள்ளி என்பவன், தோட்டி என்னும் மலைநாட்டிற்குத் தலைவன். தன் மனத்து நிகழ்வனவற்றை மறையாது கூறி நட்புக் கொண்டோர்க்கு வேண்டுவன கொடுத்தவன். காட்டில் இருந்த காலத்து அவ்வழியே சென்ற வன்பரணர் என்னும் புலவரின் வறுமை தீரும் பொருட்டுத் தன் கடகத்தையும் முத்தாரத்தையும் கொடுத்தவன். இவனைக் கண்டீரக் கோப்பெரு நள்ளி யெனவும், கண்டீரக் கோப்பெருநள்ளி எனவும் கூறுவதுண்டு.

மலையன் என்பவன், பெண்ணை யாற்றங் கரையிலுள்ள மலாடு என வழங்கும் மலைநாட்டிற்குத் தலைவன். திருக்கோவலூரைத் தலைநகர் (இராசதானி) ஆகக் கொண்டவன். தமிழ்நாட்டு மூவேந்தர்க்கும் ஒவ்வொரு சமயம் உதவி புரிந்தவன். அந்தணர்களுக்குக் கிராமங்கள் கொடுத்தவன். புலவர்களுக்கு மிகுந்த உதவி செய்தவன். இவனுடைய குதிரைக்குக் காரி என்று பெயர். இவனை, மலையமான் திருமுடிக்காரி எனவும், மலையமான் எனவும், காரி எனவும் கூறுவதுண்டு.

பேகன் என்பவன், மலைநாட்டை யுடையவன். நல்லூரில் ஆவியர் குடியிற் பிறந்தவன். கார்காலத்தில் ஒருநாள் காட்டு வழியே செல்லும்பொழுது, தோகைவிரித் தாடிய மயிலொன்றைக் கண்டு அது குளிரால் வருந்துகிறதென நினைத்துத் தான் போர்த்திருந்த போர்வையை அதற்கு அளித்தவன். தன் மனைவியாகிய கண்ணகி யென்பவளை வேறொருத்தி காரணமாகத் துறந்திருக்க, கபிலர் முதலிய சிலரால் அவளை அங்கீகரித்துக் கொள்ளும்படி பாடப் பெற்றவன். இவனை, வையாவிக்கோப்பெரும் பேகன் எனவும் கூறுவதுண்டு.

ஓரி என்பவன், கொல்லிமலைக்கும் அதைச்சார்ந்த நாட்டிற்கும் தலைவன். மலையமான் திருமுடிக்காரியின் காரி என்னும் குதிரையைச் செயித்த ஓரி என்னும் குதிரையை யுடையவன். காரியை வென்று திருக்கோவலூரைக் கைப்பற்றிக் கொண்டவன். இவனை, வல்வில்லோரி யெனவும், ஆதனோரி யெனவும் கூறுவதுண்டு.

இவர்களின் சரித்திரத்தை விரித்து எழுதலாமாயினும் விரிவஞ்சி இம்மட்டுடன் முடிக்கின்றேன்.

உ

# சண்டேசுவரர் வேறு: சண்டேசுவர நாயனார் வேறு.

---

(தேவகோட்டை, சிவாகம சங்கத்துச் சித்தாந்த போதகாசிரியர் திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள்.)

சிருட்டியின் ஆரம்பத்தில் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட சிவாகமங்களில், ஆன்மார்த்த பரார்த்த பூஜைகளில், பூஜையின்முடிவில் சண்டேசுவரருக்கு நிர்மாலியங்களை நிவேதித்துப்பூஜையைப் பூர்த்தி செய்யும்படி விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இன்றும் நடந்துவருகின்றது.

இவ்வாறு பூஜிக்கப்படும் சண்டேசுவரர் வேறு: அறுபத்து மூன்று நாயன்மாருள் ஒருவராகிய சண்டேசுவர நாயனார் வேறு. பூஜிக்கப்படும் சண்டேசுவரர், மகேசுவரமூர்த்தம் இருபத்தைந்தனுளொருவராவர். இவர், சிவபெருமானுடைய கோபாக்கினியிலிருந்து தோன்றியவர் என்பது மாத்திரந் தெரிகின்றது. கோபம் உண்டாதற்குக் காரணம் முதலியன தெரியவில்லை. பூஜையின் பூர்த்தி நிமித்தம் சூரியன், விநாயகர், சுப்பிரமணியர், அம்பிகை முதலிய தனிப்பட்ட எல்லாப் பூஜைகளிலும் சூரியசண்டர், விநாயகசண்டர், சுப்பிரமணிய சண்டர், கௌரீசண்டி முதலிய திருநாமங்களோடு சண்டேசுவரர் வீற்றிருக்கின்றார். இத்தகைய சண்டேசுவர பதத்தைச் சிவபெருமானுடைய பூஜைக்குத் தீங்கிழைத்த தந்தையின் காலைக் கோபத்தால் துணித்துப் பெற்றவர் சண்டேசுவர நாயனார்.

இந்த நாயனாருடைய காலத்திற்கு முன்னமே சண்டேசுவர பூஜை சிவாகமங்களில் விதிக்கப்பட்டிருக்கின்றமையாலும், 'சண்டீ சனுமாம் பதந் தந்தோம்' என்ற சேக்கிழார் திருவாக்காலும், பூஜையின் பூர்த்தியைச் செய்தற்குரிய சண்டேசுவரர் மகேசுவர மூர்த்தம் இருபத்தைந்தனுள் ஒருவ ரென்பதும், சண்டேச பதத்தைப் பெற்ற நாயனார் வேறென்பதும் கண்டு கொள்க.

நாம் நிட்டைசெய்து உண்மையை உணரும்பொருட்டு, நிட்டையிலிருந்து சின்முத்திரைகாட்டுந் தெக்ஷிணாமூர்த்தியைப் போல், நாம் இடையறாது சிவத்தியானஞ் செய்யவேண்டும் என்பதை அறிவித்தற்பொருட்டுச் சண்டேசுவரர் இடையறாது சிவத்தியானமுடையரா யிருக்கின்றார்.

இவரைப் பூசிக்குங் காலத்தும், தரிசிக்குங் காலத்தும், சிவபூஜை சிவதரிசனங்களைச் சமர்ப்பித்தே னென்பதற் கறிகுறியாகக் கையைத் தட்டி அவற்றின் பலனைத் தந்தருளும்படி பிரார்த்திக்க வேண்டும்.

---

உ

# உபமன்னிய முனிவர்.

---

(யாழ்ப்பாணம் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்களவர்கள்.)

மத்தியந்தின முனிவர் தம்முடைய புத்திரராகிய பாலமுனிவர் புலிக்காலையும், புலிக்கையையும், அவைகளிலே நீண்ட கண்களையும் சிவபெருமானுடைய திருவருளினாலே பெற்றமையைக் காண விரும்பித் தில்லைவனத்தை அடைந்தார். குமாரர் மனமகிழ்ந்து அவரெதிரே வந்து நமஸ்கரித்தார். பிதாவாகிய மத்தியந்தின முனிவர் அவருடைய திருமேனியைக் கண்டு மகிழ்ந்து, சிவகங்கையில் ஸ்நானஞ் செய்து திருமூலட்டானேசுரரையும் திருப்புலீச்சுரரையும் பூசித்து, அவ் வியாக்கிரபாத முனிவருடைய பர்ணசாலையில் இருந்தார்.

ஒருநாள் மத்தியந்தின முனிவர் தமது புத்திரனை நோக்கி "புதல்வனே! நம் சந்ததி தழைத்தோங்கப் பொருந்திருப்பாயின் இனி இல்லறப் பகுதியை அடையக்கடவை; உன்னை யான் பெற்றாற்போல நீ ஒருபுத்திரனைப் பெறும்படி என்வாக்கைத் தள்ளாது கொள்ளக்கடவாய்." என்று சொல்லி வசிட்ட முனிவரது கற்பின்மிக்க தங்கையை விவாகவிதிப்படி அவ் வியாக்கிரபாத முனிவருக்கு மனைவியாயிருக்கும்படி செய்தார். பின்பு, அத்தேவியார் உபமன்னிய பகவானைப் பெற்றார். அங்கே வந்த அருந்ததியார் அவரைத் தம்முடைய ஆச்சிரமத்துக்குக் கொண்டுபோய்க் காமதேனுவின் பாலையூட்டி அழகு மிக வளர்ப்பாராயினர். வளர்க்குநாளில் வியாக்கிரபாதமுனிவருந் தேவியாரும் புத்திரவாஞ்சையினாலே அவரைத் தங்கள் பர்ணசாலையிலே கொண்டுவரச்செய்து "புசிப்பாயாக"என்று கொடுத்த சாகமூல பழங்களையும், சலத்திற் கரைத்த மாவையும் அவ் வுபமன்னிய பகவான் உமிழ்ந்து போடுவாராயினர்.

திருக்குமாரர் காமதேனுவின்பாலைப் பெறும்படி அழ, வியாக்கிரபாத முனிவர் "யாம் வறியேம்; இனிமையாகிய உணவை அறியேம்; அவைகளையுடையவர் இவரே." என்று எல்லாச் செல்வமுமுடைய சிவலிங்கப் பெருமான் சந்நிதியிலே வளர்த்தி விட்டார். குமாரர் ஆதார பதும தளங்களின்மேலே சுவாலிக்கின்ற உதராக்கினி பொருந்துதலினாலே அவமிருத்து கருமமே புகலிடம் எனஅழுதார். அக்கணத்திற்றானே சிவபெருமான் திருவருளாகிய திருப்பாற்கடலை அனுக்கிரகிக்கப்பெற்று, அதனைப்பருகிச் சிவஞானமாகிய சுவையைக்கண்டு களிகூர்வா ராயினர். இச் சரித்திரம் விரிவாகக் கோயிற் புராணத்தில் வியாக்கிரபாதச் சருக்கத்திலும், உபதேசகாண்டம் சனகாதியர் சிவார்ச்சனைச் சருக்கத்திலும், சிதம்பர மாகாத்மியத்தில் பத்தாம் அத்தியாயத்திலும் காணப்படுகின்றது.

ஆவின் பால்கண் டளவி லருத்தப்
பாலன் வேண்டலுஞ் செல்லென்று பாற்கடல்
கூவி னான்குளி ரும்பொழிற் கோளிலி
மேவி னானைத் தொழவினை வீடுமே.

(திருநாவுக்கரசு நாயனார்--திருக்கோளிலி.)

அண்ட ரைத்தொலை வித்திடும் வீரனை யடைந்தோர்
பிண்ட முற்றும்வா னிறத்தினர் பூதரிற் பெரியோர்
பண்டி ரைத்தொரு முனிமகன் பின்றொடர் பாலின்
றெண்டி ரைக்கடற் றொகையெனக் கிளர்ந்தனர் சிலரே.

(கந்தபுராணம் வீரபத்திரப்படலம், செ—௩௰)

உபமந்நியுமுனிவர் கிருஷ்ணருக்குத் தீக்ஷை பண்ணி ஆண்டருளினார். அது "யாத வன்றுவ ரைக்கிறை யாகிய, மாத வன்முடி மேலடி வைத்தவன்" (பெரியபுராணம் திருமலைச்சிறப்பு—கச.) என்பதனாலும், வாயுசங்கிதை உத்தரகாண்டத்தானும் அறிக.

---

# தாலி யறுத்த கலியாணம்.

பெண்கட்குக் கன்னிநிலை, கலியாணநிலை, கைம்மைநிலை யென மூன்று நிலைகளுண்டு. கன்னிநிலை இருவகைப்படும். ஒன்று பூப்புக்கு முந்தியது. மற்றது பூப்புக்குப் பின் கலியாணம் வரையுமுள்ளது. பூப்புக்குமுன் பெண்கள் சிறுமியர் (Minors) ஆகலின், அவர்கள் சுதந்திரவீனர். பூத்துக் கலியாணமாகாத பெண்கள் பெற்றோர்களால் வீட்டினுள்வைத்துப் பிறர் பார்வையிற் படாமற் பாதுகாக்கப்படுவர். அப்பெண்களும் பிற ஆடவரைப் பார்க்கமுடியாது. ஒருவன் தொட்டும் நட்டும் பிடித்தும் கடித்தும் வருடியும் நெருடியும் சப்பியும் துப்பியும் விட்டுச் சாகத் தனித்த அவன் மனைவி கைம்பெண்டாட்டி. கான்ற சோறனைய கைம்பெண்டை மானமுள்ள தமிழன் கண்ணெடுத்தும் பாரான். 'சாத்திக் கழித்த மாலையும் சவத்தின் கழுத்துத் தாலியும்' எனக்கே யென்றுகூறித் தாரமிழந்தவனை மணக்க வெறுக்குந் தமிழச்சிகளே பலருளர். ஒருவன் சுக்கிலத்தை நக்குவது நாயின் சுபாவமன்றோ? கைம்பெண்ணும் வேறும் ஒருவனைச் சுமக்க லஜ்ஜைப் பட்டும், தன்வயிற்றுப் பிள்ளைகளிடம் முறைகேடு உண்டாதல் முதலியவற்றைக் கருதியும் ஒதுங்கிவிடுவாள். ஆகவே, காதற்பேச்சுக்குக் கன்னிநிலையுங் கைம்மை நிலையும் சிறிதும் இடந்தராமை காண்க. எஞ்சியிருப்பது கலியாணநிலை. அதில் ஒருத்தி தான் ஒருவனுக்கு மனைவி யென்றும், வேறொருவன் தன்னைப் பெண்டாள விரும்புதல் கூடாதென்றும் உலகிற்குக் காட்டவேண்டும். அப்பொருட்டு அவளுடம்பில் ஏதேனும் அடையாளம் அணியப்படல் அவசியம். தமிழக் கலியாணிகட்கு அடையாளமாயிருந்துவருவன தாலியும், அதனோடியைபுடைய மஞ்சட்பூச்சு முதலியனவும். அவ்வடையாளங்களில்லாவிடில் கலியாணநிலை யொன்றே காதற்பேச்சுக் கிடந்தரும். அடையாளமில்லாமற் கலியாணம் பண்ணிக்கொண்ட ஒருத்தி பூத்தவள்; யாவருங் காண எங்குந் திரிபவள்; கைம்மைக்கோலமில்லாதவள். சுருங்கச் சொல்லில் சு. ம. இயக்கக்காரிபோ லிருப்பவள். அவளைக் காணுங் காளைகளிற் பலர் அவளுக்குக் கலியாணமாகவில்லை யெனக்கருதிக் காதல் மணம் என்னும் வியாஜத்தால் 'பெண்ணே! உன்னைப் பெண்டாளவிரும்புகிறேன். நீ இசைவாயா?' என்று வினவிக்கொண்டே திரியலாம். கணவன் அவளருகி லிருந்தாலும் அவர் அஞ்சவேண்டாம். என்னே! தாலியில்லாக் கலியாணத்தின் மானக்கேடு! சீ! சீ!

(க. ராஜமாணிக்கப் பிள்ளை.)

உ

# ஐயோ! பாவம்!

சென்னையில் 'சச்சிதாநந்தம்' என்றொரு தமிழ்மாதப் பத்திரிகை வெளியாகி வருகிறது. அதன் ஆசிரியர் திரு கே. ஜகதீச ஐயர் பி. எ; ஸ்மார்த்தஆசாரமும் மாயாவாதக்கொள்கையும் உடையவர்; சிவாகமாசாரமும் சைவசமயக் கொள்கையும் இல்லாதவர். அப்படியிருக்க, அவர் அப் பத்திரிகையின் வெளியீடுதோறும் 'சைவம்' என்ற தலையங்கமிட்டு நீண்டதோர் வியாசம் எழுதிவருகிறார். அப் பத்திரிகையின் 42—ம் பக்கத்தில் "மாயாவாதிகள் அத்துவிதமென்பது 'இரண்டின்மை' யென்றும், சைவசித்தாந்திகள் அத்துவிதமென்பது 'இரண்டன்மை' யென்றும் கூறுவதா யறிகிறோம்.' என்று அவரால் அநுவதித்துக்கொண்டு 'இரண்டின்மை—இரண்டன்மை எனக் கூறி முரண்படுவது வியப்பையே யுண்டாக்கும்' என்று முடிக்கப்பட்டுளது. முரண்பட்ட பொருள்களில் ஒன்றைத் துணிய வேண்டுவதே பத்திரிகாசிரியருக்குப் பொறுப்பாகும். திரு. ஐயர் அந்நிலையில் அத்துவிதப் பொருள் அன்மைதானெனத் துணிந்தால், அவருக்குப் பூரி * கொஞ்சமுங் கிடையாமற் போம்; இன்மைதானெனத் துணிந்தால் அவரெழுதும் வியாசம் 'சைவம்' ஆகாமற் போம். ஆகையால், அவ்விருவகைப் பொருள்களும் தமக்கு வியப்பைத் தருவதாகச் சொல்லி அவ்விரண்டையுமே கழித்துவிட்டார் அவர். தத்துவ சாத்திர விற்பன்னர்க்கு அம்முரண்கள்எவ்வியப்பையுந் தராவென்பது அவர்க்குத்தெரியவில்லை. இன்னும் அவர் அம் முரணைக் கண்டிக்கப்புகுந்து அதேபக்கத்தில், "மிட்டாய் தித்திப்புள்ளதென்று கூறும் இருவர் அதிலுள்ள சக்கரை ஒரு கடையிலிருந்து வாங்கப்பட்டதென்றும், வேறு கடையிலிருந்து வாங்கப்பட்ட தென்றும் தர்க்கித்துப் பேதப்படுவதை நமக்கு நினைவூட்டுகிறது" என்கிறார். (இங்கெடுத்தாளப்படும் அவர் வாக்கியங்களிலுள்ள எழுத்து இலக்கணப் பிழை எம்மதன்று). இந்த உபமானத்திலுள்ள இரண்டு தார்க்கிகருக்குள் - ஒருவன்றான் முட்டாளா? இரண்டு பேர்களுமே முட்டாள்களா? இரண்டுபேருமே முழுமுட்டாள்களாகின்றனர். அப்படியே உபமேயத்திலு மிருக்க வேண்டுமல்லவா? உபமேயத்தில் அத்துவிதத்திற்கு இன்மைப்பொருள் கொண்டவர் சங்கராசாரியர் முதலாயினோர்; அன்மைப் பொருள் கொண்டவர் ஸ்ரீமெய்கண்ட சிவாசாரிய சுவாமிகள் முதலாயினோர். இவ்விருதிறத்தினர்க்குமே அப் பட்டங் கிடைக்குமாறு அவர் உவமை காட்டிய திறம் எப்படிப்பட்டது? சைவ ஸ்தாபனப் பிரியம்அவரிடம் உண்மையிலிருக்குமாயின், முதலில் அவர் தம்மைச் சைவராக்கிக் கொள்ள வேண்டும். அஃதின்மையால் அவர் சைவத்தை உள்ளபடி விளக்கமாட்டாமலும் மாயாவாதத்தைத் தம்மை மறந்துவைதும் தவிக்கலானார். ஐயோ பாவம்;

க. ராஜமாணிக்கப் பிள்ளை.

---

* பூரி சங்கராசாரியாரது ஸ்ரீமுகம் அப்பத்திரிகைக்குக் கிடையாமற் போமென்பது கருத்து.

# சிவவழிபாடு.

(சூதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்களவர்கள்.)

(திங்கள்-ச: 68-ம் பக்கத் தொடர்பு.)

சிவன் பிரகாச வஸ்துவாயினும் ஆன்மா மலமறைப்பின் மயங்கிக் கடவுளைக் காணமாட்டாது. எதுபோலு மெனில், சூரியன் ஒளியுடைப் பொருளாயினும் குருடன் அதனைக் காணமாட்டாமை போலும்.

சூரிய ஒளியைக் கண் உடையார் காண்பது போலக் கடவுளது பிரகாசத்தை ஞானிகளே காண்பர். கண்ணுடையார்க்குக் குருடில்லை. ஞானிகளுக்கு மலமறைப்பில்லை. கண்ணுடையார்க்குச் சூரியவொளியே வியஞ்சகமாய் நின்று சூரியனைக் காட்டும். ஞானிகட்குக் கடவுளருளே வியஞ்சகமாய் நின்று கடவுளைக்காட்டும். "அவனருளே கண்ணாகக் காணினல்லால்" என்றதும் அதுநோக்கி. ஞானிகளது வழிபாடு சிவஞானத் துணையாக நடப்பது. அதனால், அவர் ஞானக்கண்ணாற் கண்டு வழிபடுவர். அவர் வழிபாட்டிற்குக் கடவுளு மெட்டுவர். அதுவே உண்மை வழிபாடாம்.

ஞானிகளது வழிபாடாவது தம்மை விழுங்கிய சிவஞானத்துள்ளே தாமடங்கி ஒடுங்கியிருத்தல். 'ஓங்குணர்வி னுள்ளொடுங்கி யுள்ளத் தெளியின் பொடுங்கத், தூங்குவர்மற் றேதுண்டு சொல்.' என்றதும் அதுநோக்கி.

குறைந்த பக்குவிகட்கு ஏற்ற படிமுறையான ஞான வழிபாடுகளுமுண்டு. அவை, கேட்டல், சிந்தித்தல், தெளிதல்களாம்.

இனி, இவ்வழிபாடுகள் ஞானிகளல்லாதார்க்குப் பொருந்துவனவல்ல. ஞானிகளல்லாதார்க்குச் சிவஞானம் வியஞ்சகமாகாது. அவர்க்கு வியஞ்சகமாவது மனமும் வாக்குமேயாம். அஃதாவது, பசுஞான பாசஞானங்களேயாம். அவரது மலமறைப்பே அதற்குக் காரணமாம்.

ஆயினும், அவரும் கடவுளை வழிபட்டு உய்யவேண்டியவராகலின், எல்லாமுணர்ந்து எல்லாம் வல்ல கடவுள் அவர் வழிபாட்டிற்குத் துணைசெய்வர். அதாவது, மனசினாலே தியானித்தற்குத் தக்கவடிவங் கொள்வர். அது சுத்தமாயாகாரியமாகிய மந்திர வடிவமாம். சிவம் அதற் றங்காதாயினும், அவரது சத்தி அம்மந்திரவடிவிற் றங்கிநின்று வழிபாட்டை யேற்றுக்கிருபை செய்யும். மனத்தினாலே மந்திரவடிவைத் தியானிப்போர் யோகிகளெனப்படுவர். மனம் அகத்து ஒடுங்குதலும் புறத்து விரிதலுமாகிய இயல்பினையுடையது. யோகிகள் மனத்தை விரியவிடாது ஒடுக்குதற்கு உபாயமாகப் பிராணாயாம முதலியன செய்வர். அது காலாந்தரத்தில் அப்பியாசமேலிட்டால் நிகழ்தற்பாலது. அவ்வாறன்றி, இலேசாக மனத்தை யொடுக்கிக் கடவுளை வழிபடுதல் முடிந்ததன்று. ஆதலின், மனத்தாற் செய்யும் யோகவழிபாடும் எல்லார்க்குமரிதாம். இனி, மானத வழிபாடு செய்யத்துயலார்க்கு இயன்றளவில் மானத வழிபாடும், பெரிதும் காயவழிபாடுஞ் செய்யத்தக்க சத்தியுண்டாதலின், அவர் பொருட்டுக் கடவுள் உருவத் திருமேனிகொள்வர். அவை மூர்த்திகள் எனப்படும். சிவசத்தி அம்மூர்த்திகளை யதிட்டித்து, வழிபடுவோர் வழிபாட்டை ஏற்றுக் கிருபைசெய்யும். அம்மூர்த்திகள் காலாக்கினியருத்திரர் முதல் அநாசிருதரீறாயுள்ள புவனபதிகளாயும், பஞ்சகர்த்தாக்களாயும்; உமாமகேசுரர் சபாபதி தக்ஷிணாமூர்த்தி சோமாஸ்கந்தர் முதலிய வடிவங்களாயு மிருப்பர். இவருள்ளே சதாசிவமூர்த்தியை அகத்தும் புறத்தும் வழிபடுவோர் ஒருவகையர். அவர் கிரியையாளரெனப்படுவர். இவற்றின் பயனாகியமுத்திகளும் பரமுத்தி, பதமுத்தி, அபரமுத்தியென மூவகைப்படும். இவ்வாறு சிவவழிபாடும் அதன் பயனும் நுனித்தறிய நின்றன வென்க.



# பொங்கற் பண்டிகை.

(கண்டாச்சிபுரம் திரு. அ. முத்தைய பிள்ளையவர்கள்.)

நம் பரதகண்டத்திற் கொண்டாடப்பெறும் பல்வகைப் பண்டிகைகளுட் பொங்கற்பண்டிகையும் சிறந்த தொன்றும். இது, சூரியன் மகரராசியிற் பிரவேசிக்கும் நாளாகிய தைமாதம் முதற் றெய்தியில் நிகழ்வது. இந்நாள் தேவர்களுக்குப் பகற்காலத் தொடக்கமாகிய உத்தராயணமாகும். தேவர்களுக்கு இரவாகிய தக்ஷிணாயனத்து ஆறு மாதங்களில் "மகாசங்கிராமே" என்னும் சத்தியானது மக்களை மூதேவி யுருவாயும், பசுக்களைப் புலியுருவாயும் துன்புறுத்துவதெனவும், அத்துன்பம் சங்கராந்தி நிக்கிரகத்தால் சாந்தியடைவதால், தை முதற்றெய்தியில் சிவபெருமானது அஷ்ட மூர்த்தங்களுள் ஒன்றாகிய சூரியனுக்குப் புதுப்பண்டங்களைக் கொண்டு பொங்கலிட்டுப் பூசிப்பதும், பசுக்களின் றுன்பம் நீங்கியதற்காக மறுநாள் பொங்கலிட்டுப் பூசித்து மாடுகளுக்கு ஊட்டுவதும் வழக்காற்றிலிருக்கின்றன.

சிவபெருமான், மண் நீர் அனல் வளி வான் ஞாயிறு திங்கள் ஆன்மா ஆகிய எட்டுவடிவா யிலங்குகின்றனர் என்பது,

"இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி
இயமான னாயெறியுங் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்த மாகி."

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்."

என்னும் சமயாசாரியர் திருவாக்காற் செவ்விதிற் றுணியப்படும்.

இவ்வாறு சங்கர ஆராதனையைக் குறிப்பதால், இப்பண்டிகைக்குச் "சங்கராந்தி" எனப் பெயர் வழங்கலாயிற் றென்பர்.

அன்றியும், உலகம் நடைபெறுதற்குத் துணைக் காரணமாகிய மாரியுதவும் மேகவாகனனாகிய இந்திரனுக்கு இவ்விழா எடுக்கப் பெற்று வந்ததெனவும், திருமால் கிருஷ்ணாவதாரத்தில் அதனைத் தடுத்துத் தனக்கு இயற்றுமாறு செய்தனரெனவும், அதுகண்டு கனன்று இந்திரன் கன்மழையைப் பெய்விக்கக் கிருஷ்ணபகவான் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்துக் காத்தன ரெனவும், பின்னர் குறையிரந்த இந்திரனுக்கிரங்கி பொங்கற் பண்டிகைக்கு

முதல்நாள் அவனைப் பூசிக்கப்பணித்தன ரெனவும், அதனால் அது போகிப் (இந்திரன்) பண்டிகை யென வழங்குகிற தெனவும், இவ் விந்திர விழா வரலாறு சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பழந் தமிழ் நூல்களிற் காணப்படுகின்ற தெனவும், பிறவும் கூறுவர்.*

எது எவ்வாறாயினும் இப்பண்டிகை மக்கள் மனம் பொங்குதற்கு, அதாவது களிப்புறுதற்குச் சிறந்த தொன்றாகத் திகழ்கின்றதென்பதற் கையமின்று.

இன்னும், இப் பண்டிகை மக்களிடையே சுகாதாரம் பரவுதற்குச் சிறந்த துணையாகவும் காணப்படுகிறது. எவ்வாறெனில், மார்கழி மாதத் துவக்கத்திலிருந்தே மக்கள், தத்தம் வீடுவாசல்கள் பாத்திரம் பண்டங்கள் ஆடைகள் முதலியவற்றைத் துப்புரவு செய்தலும் பாதுகாப்பித்தலும் உடையவராகக் காணப்பெறுகிறார்கள். இச் சுசி யுடைமையால் சுகாதாரம் மேலிடுவதாகும்.

இத்தகு தூய விழாவைச் சில மதியீன மக்கள், ஆடு கோழிகளை அறுத்துண்பதும், மது மாந்தி மயங்கிக்கிடப்பதும், சீட்டு சொக்கட்டான் முதலிய சூது விளையாடுவதும் ஆகிய மறவினைபுரிந்து பழிபாவங்கட் கிடமாய்க் கொண்டாடிக் கழிக்கின்றனர். பொங்கலிட்டுப் புண்ணியந் தேடத்தொடங்கி அறக்கொடும் பாவத்துக் காளாகின்றார்களே! இஃதெவ்வளவு அறியாமையாகும்!

ஆதலின், சர்வஜீவதயாபர மூர்த்தியாகிய சங்கரனைப் பூசித்தற் கமைந்த சங்கராந்தி புண்ணியகாலத்தில், மக்கள் மேற்காட்டிய தீச் செயல்களை யொழித்துத் தூய்மையுடன் புதுப் பாண்டத்திற் பொங்கலிட்டு இறைவனைப் பூசித்து இகபர இன்பங்களைப் பெற்று இனிது வாழத் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

---

# மதிப்புரை மஞ்சரி.

போற்றிப் பஃறொடையும்: வினா வெண்பாவும்:--இவை, சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் அருளியவை. இவற்றுள், முன்னது சித்தாந்த வுண்மைகளைச் செவ்வி திற் றெருட்டும் சாத்திரமாவதுடன் தோத்திரமாயும், பின்னது சித்தாந்தத்தில் அரிய பெரிய பன்னிரண்டு விஷயங்களை வினா வாயிலாய் விளக்குவதாயும் அமைந்துள்ளன. இவ் விரு அறிவுநூற்களுக்கும் முன்னமே பலவுரைகள் வெளிவந்திருப்பினும், இதுபோது திருநெல்வேலிப்பேட்டை, சைவத்திருவாளர் ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளையவர்கள் பதவுரை கருத்துரைகள் வரைந்து வெளியிட்டுள்ள இவை, இக் காலநிலைக் கேற்றவாறு இளைஞர்களும் பயிலுமுறையில் எளிய தெளிய நடையில் உண்மையை யுணர்த்தும் திண்மையுடையனவா யிலங்குகின்றன. போற்



றிப் பஃறொடையைப் பல பகுதிகளாகப் பகுத்துரைத்திருப்பது, பயில்வார்க்கு நூற்கருத்து மனத்திற் பதிவதற் கேற்ற துணை யாகும். இப் புத்துரையைக் "காலத்தி னாற்செய்த நன்றி" யெனச் சைவவுலகம் போற்றுங் கடப்பாடுடைத்தாம். விலை அணா 8.

சமணர் கழுவேற்றம்:—இது ஷை பிள்ளையவர்களால் இயற்றப் பெற்றது. மதுரைமாநகரிற் சமணர்கள் கழுவேறியதற்குத் திருஞானசம்பந்தப்பெருமான் காரணம் எனக்கூறும் சில வம்பர்களது வாய் மதத்தை யோட்டி, பெரியபுராணப் பிரமாணங்கொண்டு பல்லாற்றா னாய்ந்து, சமணர் கழுவேற்றத்துக்குச் சமணர்களே நேர்காரணம் எனத் திறம்பட விளக்கித் தெருட்டுந் திட்ப நுட்பஞ் செறிந்தது. பிள்ளையவர்களின் ஆராய்ச்சித்திறன், அறிஞருலகத்துக் கருமருந்தென துணிக்கும் அருமையுடைத்தென்பதை, இந்நூல் செவ்வனடியிற் றெரிக்காநின்றது. இதன் விலை அணா 2.

இந் நூற்களும், இவ்வாசிரியர் வரைந்து வெளியிட்டுள்ள "திருவருட்பயன்: தொடிக்கவி" ப்புத்துரையும், 'திருநெல்வேலிப் பேட்டை, திரிபுரசுந்தரியம்மன் கோயில் மேலத்தெரு, மெய்கண்டான் நிலயம், த. ஆ. வேங்கடாசலப் பிள்ளை' யவர்களிடத்தும், 'சென்னை, ரிப்பன் புத்தகசாலையிலும்' பெற்றுக்கொள்ளலாம்.

திருக்குறள் நாட்குறிப்பு:—திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் வெளியிட்டது. இதில், தெய்வத் தமிழ் மறையாகிய திருக்குறளில், நாள் ஒன்றுக்கு ஒரு குறளாக ஓராண்டுக்குரிய முதல் 365 குறட்பாக்கள் கருத்துரையுடன் அடங்கியுள்ளன. இன்னும் தமிழாண்டுப் பஞ்சாங்கம், இந்து, முகமதிய, கிறிஸ்தவமதச் சிறப்பு நாட்கள், சைவ வைணவப் பெரியார் திருநாட்கள், அரசியல் விடுமுறை நாட்கள், தபாற் குறிப்புகள், வட்டி அட்டவணை, சம்பள அட்டவணை யாதிய பலவும் குறிக்கப்பெற்றுள்ளன. பலரால் வெளியிடப்பெறும் நாட்குறிப்புகளை விட நாளுக் கொவ்வொன்றாகத் திருக்குறளை யாவரும் மனதில் எளிதிற் பதித்துக்கொள்வதற்கு ஏற்ற துணையாக இருத்தலின், தமிழ் மக்கள் கரத்திற் பொற்பணி யெனப் பொலியும் பெருமையுடையது இஃதென்னலாம்.

பொன்மலர்:—புதுச்சேரி, தமிழ்க்கல்விச் சங்கத்திலிருந்து தமிழ்ப் பண்டிதர் திரு. வீ. துரைசாமி முதலியாரவர்களை யாசிரியராகக் கொண்டு வெளிவரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடு. இதன் முதன்மாலை முதனான்கு மலர்கள் வரப்பெற்றோம். தான் மலர்தற் கிடமாகிய சங்கத்தின் றகுதிக் கேற்பத் தமிழ்த் தொண்டாற்றுஞ் சால்புடைத்தாய், செந்தமிழ் இலக்கிய இலக்கண சாத்திர நூல்களின் நுட்பங்களைப்பற்றிய சிறந்தகட்டுரைகளும், உலக நிகழ்ச்சிகளும் ஆகிய தண்ணறுந்தாதுகமழுஞ் சொன்மலிவுற்ற பொன்மலராகப் பூத்துள்ளது. முன்னுரை முதலியவற்றால் ஆசிரியரின் கட்டுரை வன்மையும் கடவுட்பற்றும் பிறவும் அங்கை நெல்லியென அறியத்தகும். சிறு பொழுதிற் செவ்வி கெடும் பன்மலர்போலாது, என்றும் புலரா நறுமணத்த சொன்மலராகிய இப் பொன்மலரைத் தமிழத் தாய்வயி னுதித்த மக்களனைவரும் பொன்னேபோற் போற்றும் பொறுப்புடைய ராவாராக! வருட சந்தா உள்ளூர்க்கு ரூ 1; வெளியூர்க்கு ரூ 1—8—0

வித்தகம்:—யாழ்ப்பாணத்துத் தென்கோவைத் தமிழ்ப் பண்டிதர் திரு. ச. கந்தைய பிள்ளையவர்களை ஆசிரியராகக் கொண்டு, புதுச்சேரியிலிருந்துவெளிவரும் செந்தமிழ்வாரத்தாள். இதன் முதற்பகுதியின் முதற்றொகுதி வரப்பெற்றோம். திருவருளைத் துணைகொண்டு, தெய்வமணக்கமழும் திருவாசகப் பாமலர்களைச் சிரத்திற்சூடி, சாகாக்கல்வியின் உண்மையைத் தமிழ் மக்கட்கு வலியுறுத்தும் அரியபெரிய கட்டுரையையும், வர்த்தமானங்களையும் கொண்டு விளங்குகின்றது. இதனாசிரியரது தமிழ்ப்புலமைத் திறனும், சைவசமயப் பற்றும் தமிழுலகம் நன்கறிந்ததே. சமய சாத்திரங்களின் உள்ளுறைகளை யறிதற்கு இஃது உற்றதுணையாகும். இதற்குச் சந்தா உள்நாட்டுக்கு ரூ 3; வெளிநாட்டுக்கு ரூ 4. விலாசம் 'வித்தக நிலையம், புதுச்சேரி. FR. India'

[மேற்கண்ட நூற்பிரதிகள் முதலியவற்றை எமது பார்வைக் கனுப்பியுதவிய ஆசிரியர்கட்கு நமது நன்றி யென்றும் உரியதாகுக. ப-ர்]

---

## சிவநேசனுக்கு மதிப்புரையும் வாழ்த்தும்.

### வயித்தீசுவரன் கோவில்
### சிவஸ்ரீ கா. மு. கிருஷ்ணசுவாமிக் குருக்களவர்கள்.

செல்வம் நிறைந்த "சிவநேசன்" பத்திரிகை பார்த்து, அதிலுள்ள சாஸ்திரக் கருத்துக்களை யுணர்ந்து மனவெழுச்சியுடன் பேரானந்தமுற்று, 'சிவநேசன்' சிறந்தோங்கத் தையனாயகி சமேத வைத்தியநாதர் சன்னிதானத்திலும், முத்துக்குமாரசுவாமி சன்னிதானத்திலும் பிரார்த்தித்துவருகின்றேன்.

### மகிபாலன்பதி பண்டிதமணி திருவாளர்
### மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

"சிவநேசன்" திருத்திய முறையில் சிறந்த பொருள்களைத் தாங்கி வெளிவருதலை யறிந்து உவகை யெய்துகின்றேன்.

### காஞ்சீபுரத்தைச் சார்ந்த ஐயங்கார்குளம்
### சைவபுராணிகர் திருவாளர்: அ. க. பொன்னுசாமி முதலியார் அவர்கள்.

1. உலகெலாம் பரவி யல்ல லுற்றிடு மியிரக் தன்னை
இலகொளி விரித்து வென்று ழிரித்திடுர் தன்மை யேபோ
லலகிலான் மாக்க டங்க ளறிவினை யலைத்த முத்து
மலமிரித் தருளு ஞான மலிசிவ நேசன் வாழி!

2. இச்சிவ நேசற் போற்று மிசையினர் வியாச நல்கும்
பொச்சமி லறிஞ ரச்சிற் பொறித்திடும் இராம சாமி
விச்சைதால் வல்லான் இன்னோர் விரும்புமீ ரெண்பே றுற்று
கச்சியே கம்பன் காமக் கண்ணிதன் னருளால் வாழி!

---



கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளு சிவபெரு மானே.

அருட்டுறை—திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருட்டுறையி
உறையும்—எழுந்தருளியிருக்கின்ற [லே
பொருள் சுவை நாத—ஞானனந்தத் தலைவரே!
வேறு என்று இருந்த—(இதுவரைத் தம்மின்) வேறாயிருந்த
என்னை—என்னை
யான் பெற—என்னுண்மையழியாமல்
வேறு இன்மை கண்ட—தாமாக்கிக்கொண்ட
மெய்கண்டதேவ—மெய்கண்டதேவரே!
மன்ன—ஞானராஜரே!
ஒருவா—ஒப்பற்றவரே!
சிவபெருமானே—சிவபெருமானே!
அற்றது—(என்னைவிட்டு) நீங்கினவை
என் பாசம்—எனது மலங்கள்.
உற்றது—(நான்) அடைந்தது
உன்கழல்—உமது திருவடியை.

(ஆனால் எனக்கொரு சந்தேக முளது. அஃதாவது)

இருவினை என்பது—இருவினையென்று சொல்லப்படுவது
என்னை—எது? (என்பதே).
அருளிய—(நீர்) தந்த
மனம் வாக்கு காயம் எனும்—மனம் மொழி மெய்யென்ற
மூன்றின்—மூன்று கரணங்களாலும்

(நான் செய்கின்ற)

இதம்—நல்வினை,
அகிதம்—தீவினை
எனும் இவை—என்னு மிவ்விரண்டுமே
ஆயின்—(இருவினை) யென்பீராயின்,

(அவை தோன்றி)

கணத்திடை—நொடிப்பொழுதில்
அழியும்—அழிந்துவிடும்; (மறுகணத்தில்)
தினைத்துணை—கொஞ்சமேனும்
ஆகா—சீவித்திரா.

(இன்னும்)

காரணம்—காரணமாகிய திரிகரணங்களும்
சடம்— சடம் (ஆகலின்)
அதன் காரியம்—அவற்றின் காரியமாகிய தொழில்களும்
அஃது—சடமே.

(அங்ஙனமாக அத்தொழில்கள் தாமேவந்து)

அடியேற்கு—எனக்கு
ஆர் அணங்கு—பெரியபந்தம்
ஆம் வழி என்னை—ஆகும் விதமெப்படி?
(இனி, கரணங்கள் தொழிற்படுவதே என்னுலாகையால்),
செயல்—எல்லா வினைகளும்
எனதாயின்—என்னுடையனவே யென்பீராயின்,
நல் செயலே—(என்பால்) நல்லவினைகள் மட்டும்
வாராது—நிகழாமல்
இயமன் செய்தியதற்கு—யம தண்டனையைத் தரும் தீவினைகளும்
என்—(காரணம்) என்னை? [நிகழ
பின்னை—தவிர
நின் அமைவும்— நீர் இருப்பதும்
இன்றாகும்—உபயோக மற்றதாகும்.
அன்னதும்—நீர் இருப்பதும்
இங்கு—(நான்) இப்பிறப்பிற் (செய்த)
செய்திக்கு—வினைக்கு
உள்ள செயலவை—உரியபயனை
அருத்தின்—(எனக்கு மறுபிறப்பில்) ஊட்டுதற்காம்(என்பீராயின்),

(அதனை யூட்டுதற்கு)

மையல் திரி—மயக்கம் நீங்கிய
யமற்கு—யமனு மிருப்பது
வழக்கு இலை—அவசியமில்லை.

(ஏனெனில்)

ஒருவற்கு—ஒருவனுகிய என்னை யுண்பிக்க
ஒருவரே—ஒருதெய்வமே
அமையும்—போதும்;
இருவரும்—(நீரும் யமனுமாக) இருவரும்
வேண்டா—வேண்டியதில்லை (யென்க).

(இருவருமே வேண்டுமாயின் நீர்)



இறைவனும்—இறைவனென்னும் பெயருக்கு
நின்றனை—தகுதியற்றவரு மாவீர்.

(நிற்க)

அமைத்தது—(எனது) பிராரத்தத்தை
துய்ப்பின்—(நான்) அனுபவிக்கும்போது
எமக்கு—எனக்கு (ஆகாமியம்)
அணைவு இன்றும்—உண்டாதவில்லை.

(ஏனெனில்)

உள்ளது—உள்பொருள்
போகாது—(ஒருக்காலும் இல்பொருளாய்) ஒழியாது;
இல்லது—இல்பொருள்
வாராது—(ஒருக்காலும் உள்பொருளாய்த்) தோன்றாது;
உள்ளதே—உள்பொருளே
உள்ளது—தோன்று மியல்பை யுடையது
எனும் உரையதனால்—என்னுஞ் சற்காரிய வாதத்தினுல் (என்க).

(ஆனல்)

கொள்ளும் வகையால்—(நான்பிராரத்தத்தை) அனுபவிக்கும் வாயி [லாய்
கொடுத்திடும் ஆயின்—(நீரே ஆகாமியத்தையென்னுடு) இயைவிப் [பீராயின்,
தின்னது கருணை—உமதுகருணை
சொல் அளவு இன்றே—சொல்லுக்கடங்காத பெருமையையுடைய [தல்லவா?
வன்னன்மை எலாம்—அக்கருணை (முதலிய உமது பிரதாபங்களை) [யெல்லாம்
உன்னிட அமையும்—(நான்)நினைத்துக்கொண்டிருப்பதேபோதும்.

(அங்ஙனமின்றி ஆகாமியம் ஏறுதற்கேற்ப)

ஈயவேண்டும் எனும்—ஈதல்வேண்டும் என்பது முதலிய
விதி—விதிகளையும்

(எனக்கென்று நீர் வேதத்தில்)

இன்றும்—அருள வேண்டியதில்லை.
ஆயினும்—(எது எங்ஙனம்)ஆயினும்
என்னை அருந் துயர்ப்படுத்தல்—என்னைப்பெருந் துயரத்திலழுத்தி
நன்று மன்—மிகவும் நன்றாயிருக்கிறது. [யது
மாயக் கருமமும்—கொடிய இருவினைகளின் உண்மையையும்

கரும பந்தமும்—அவைகள் என்னைப் பந்தித்த விதத்தையும்
தெருள—(நான் மிகத்தெளிவாகத்) தெரிந்துகொள்ளும்படி
நாயினேற்கு—எனக்கு
அருளு—சொல்லியருளுக.

மனவாக்குக் காயமென்னு மூன்று கரணங்களினின்றும் முறையே நினைத்தல், பேசுதல், செய்தலென்னுந் தொழில்களுண்டாகின்றன. இவைகளே நல்வினைகளுந் தீவினைகளுமாய் நின்று ஆன்மாவைப் பந்திக்குமாயின், இவையெல்லாம் அவ்வப்போது தோன்றி அவ்வப்போதே அழிவனவாயிருக்கும். அங்ஙனமாக இவை ஆன்மாவுக்குப் பயன்தரும் வரை நீடு நிற்பதும், பந்தமாவது மெப்படி?

கரணங்களாகிய சடத்தினின்றும் உண்டான தொழில்கள் தாமுஞ் சடமாகலின் வினைமுதலாக நின்று ஆன்மாவைப் பந்திப்பதெப்படி?

அவை கரணங்களின் தொழில்களல்லவாய், அக்கரணங்களை யியக்கும் ஆன்மாவின் தொழில்களாமாயின், அவ்வான்மா நல்வினைகளைச் செய்வதோடமையாமல், தீவினைகளையுஞ் செய்வதேன்?

ஆன்மாவுந் தானே வினைகளைச் செய்துகொள்ள வல்லதாயின் இறைவனிருப்ப தெற்றுக்கு?

ஆன்மாவுக்குப் பிராரத்தத்தை யூட்டுதற் பொருட்டவனிருப்பதாயின் அதற்கு யமனிருக்கின்றான். ஆகலின், இறைவனு மிருப்பது மிகையல்லவா?

இருவருமே வேண்டுமாயின் இறைவனது முழுமுதன்மை கெடாதா?

இல்பொருள் ஒருக்காலுந் தோன்றாது. உள்பொருளே தோன்றும். இது சற்காரியவாதம். ஆன்மா பிராரத்தத்தைப் புசிக்கும்போது அதற்குப் புதுவினை யேறுவதாயின் அப் புதுவினை முன்னரில்லாததாய்ப் பின்னர்த் தோன்றுதல் வேண்டும். இது சற்காரியவாத விரோதமல்லவா? அஃதெப்பொழுதுமே யுள்ளதாயின், புதுவினை யென்னும் பெயர் பெறுவதேன்?

புதுவினையென்பதாகாமியம்.

ஆன்மா பிராரத்தத்தை யனுபவிக்கும் வாயிலாய் அதற்கு ஆகாமியத்தைச் சிவபெருமானே யியைவிப்பானாயின் அஃதொன்றே போதும். ஆன்மா அவனை நினைத்துக்கொண்டிருப்பதோடமையாமல் தானாகவும் ஆகாமியத்தை யீட்டிக்கொள்ளுதல் வேண்டா. ஆனால், வேதத்தில் 'தானஞ் செய்க; தருமஞ்செய்க' எனப் பல விதிகள் ஏற்பட்டுள்ளன. ஆன்மா அவைகளைச் செய்தல்வேண்டும். செய்யின் அஃது ஆகாமியத்தைத் தானாகவும் ஈட்டிக்கொள்ளுகின்றது. இவ்வாறு ஆகாமியத்தைப் பயக்கும் விதிகளும் அவைகளை யான்மாச் செய்தலு மெற்றுக்கு?

---



15. மானமருஞ் செங்கை மதில்வெண்ணை வாழ்மன்ன
போனவினை தானே பொருந்துமோ—யானதனி
லாவனோ வாக்கா யமலனா நின்னருடான்
றேவனே யாதுக்கோ தேர்.

மான் அமரும்—மான் தங்கிய
செங்கை—சிவந்த கையையுடையவரும்,
மதில் வெண்ணை—மதில்சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில்
வாழ்—வாழ்கின்றவரும் (ஆகிய)
மன்ன—அரசரே!
தேவனே—ஒளிமயமானவரே!
போனவினை—(எனது) முன்வினை
தானே—தானே(வலிய வந்து)
பொருந்துமோ—(எனக்கனுபவமாய்) பொருந்துமா?
(அல்லது)
யான்—நானே (வலியச் சென்று)
அதனில்—அவ்வினையை
ஆவனோ—எடுத்தனுபவிப்பேனா?
(அல்லது நீரே எனக்கவ் வினையைப் புசிப்பிப்பீரா?)
ஆக்காய்—(நீரும்) ஊட்டமாட்டீர்(ஆயின்)
அமலன் ஆம்—மலமற்றவராகிய
நின் அருள் தான்—உமதருளால் வந்த தனு கரண புவன போகங்கள்
யாதுக்கு—இருப்பதெதன் பொருட்டு?
தேர்—திருவுளங்கொண்டருளுக.

செய்தவினை தானாகவே ஆன்மாவுக் கனுபவமாய் வருமா? அல்லது, ஆன்மா அவ்வினையைத் தானாகவே போய்ப் புசிக்குமா? அல்லது, இறைவனே அவ்வினையை ஆன்மாவுக்குப் புசிக்கக்கொடுப்பானா? இவ்வளவு மில்லையாயின் தனுகரண புவனபோகங்கள் உண்டாயிருப்பதேன்?

---

16. தோரா துரைப்பன் றெருமா லுளத்தோடு
போரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னைக் கலப்ப தென்னுண் மையெனின்
நின்னது சேர்மை சொன்மனத் தின்றே
யெழுவகைத் தாதுவி னெழுதலை யிரண்டு
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனைப் போக்கற நிறுத்தி

யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கு மனமும் போக்குள தநுவுஞ்
சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலு
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றாய்க்
காலமுந் தேசமு மாலற வகுத்து
நடுவுநின் றருத்தலி னடுவனு குதியே
சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
யத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே யொத்தகன் மத்திடை
நீங்கின வென்னை யூங்கூழ் வினைகளு
மாங்கவை யருத்துவ தாரைகொ லதனாற்
கரும மருத்துங் கடனது வின்றாந்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கண்ணி னுண் மணிய கருத்தி னுட் கருத்த
வெண்ணை வேந்த மெய்கண்ட தேவ
விடர்ப்படு குரம்பையு ளிருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சொல்லே.

கண்ணினுள் மணிய—கண்மணியே!
கருத்தினுள் கருத்த—அறிவுக்கறிவாயுள்ளவரே!
வெண்ணை வேந்த—திருவெண்ணெய் நல்லூர்க்கரசரே!
மெய்கண்டதேவ—மெய்கண்டதேவரே!
சான்றோர் செய்தி—பெரியோர்களறிவு
மான்று இருப்பின்று—மயக்கதோடிராது.
சாலார் செயலே—சிறியோர்களறிவே
மால் ஆகுவது—மயக்கத்தோடிருப்பது.
போரது—சலிப்பின்றி
அருளுதல்—(சந்தேக நிவர்த்தி) செய்தல்
பெரியோர் கடன்—பெரியோர்களி னியல்பாகும்.

(ஆகலின், இச் சாலாருளொருவனாகிய நான்)

தெருமால் உளத்தொடு—கலக்கமான அறிவோடு
தேராது—(அது) தெளியமாட்டாமல்



உரைப்பன்—(சிலவற்றை உம்மிடம்) வினவுகின்றேன்.

(அவை வருமாறு)

நின்னைக் கலப்பது—(நான்)உம்மைக் கலப்பதே
என் உண்மை எனின்—எனதியல் பென்பீராயின்,
நின்னது நேர்மை—உமதியல்பு
சொல் மனத்து இன்றே—(எனது) வாக்கு மனங்களி லடங்காதே.

(அங்ஙனமாயின் நான் கலப்பதெப்படி? இன்னும் எனது)

இச்சை முதலிய—இச்சை முதலிய (சக்திகளை)
எழுப்பி—விளக்கி
என்றனை—என்னை
எழுவகைத் தாதுவின்—எழுவகைப்பட்ட தாதுக்களாலும்,
எழுதுளை—எழு (சிறிய) துவாரங்களாலும்,
இரண்டு பெருமுழை—இரண்டுபெரிய துவாரங்களாலும்(இயன்ற)
குரம்பையில்—உடம்பில்
பெய்து—புகுத்தி
அகத்து அடக்கி—அதனுள்ளே யடைத்து
போக்கு அற—வெளிப்படாதவாறு
நிறுத்தி—தடுத்தும்
நீக்கி—(மாணத்தில் அதனைவிட்டுப்) பிரித்தும் (இவ்வாறு)
நடத்திடும்—பிறப்பிறப்பிற் படுத்துகின்ற
விச்சை—(உமது) சாமர்த்தியம்
சாலவும் வியப்பு—மிகவும் ஆச்சரியமாக விருக்கின்றது.
அது நிற்க—அஃதிருக்கட்டும் (இனி),
போக்கு உள—வரைகடத் தியங்குதலை யுடைய
வாக்கும்—வாக்கும்,
மனமும்—மனமும்,
தநுவும்—காயமும் (முறையே)
செய்யும்—செய்கின்ற
சொல்லும்—சொல்லிலும்,
நினைவும்—நினைவிலும்,
செயலும்—செயலிலும் (உள்ள)
நல்லவும்—நல்லவைகளும்,
தீயவும்—தீயவைகளும் (ஆகிய)
எல்லாம்—எல்லாவற்றையும்
அறிந்து—தெரிந்து

(அவற்றின் அனுபவத்துக்கு வேண்டப்படும்)

*காலமும்—காலத்தையும்,*
*தேசமும்—இடத்தையும்*
*மால் அற—குற்றமில்லாமல்*
*வருத்து—உண்டாக்கி*
*(அவ்வினைகளை யெனக்கு)*
*முறை பிறழாமல்—(ஒருவர் வினையை மற்றவ ரனுபவித்த லென்*
*[னும்) முறைத்தவ றில்லாமலும்*
*குறைவு நிறைவு இன்றாய்—(குறைந்த அநுபவம், மிஞ்சிய அநுபவ*
*[மென்னும்) அளவுத் தவறில்லாமலும்*
*நடுவு நின்று—நடுவுநிலையி லிருந்துகொண்டு*
*அருத்தலின்—அநுபவிக்கக் கொடுத்தலின்*
*நடுவன் ஆகுதி—(நீர்) நீதிபதி யாகின்றீர்.*
*(ஆனால்)*
*ஒத்த கன்மத்திடை—(எனது) இருவினை யொப்பில்*
*அத்துவா மெத்தி—(ஆறு) அத்துவாக்களிலும் நிறைந்து*
*அடங்கா—அநுபவத்துக்கு வாராத*
*வினைகளும்—சஞ்சிதங்களையும்*
*சுத்திசெய்தனை—(எனக்கு) நீக்கினீர்.*
*ஊழ்வினைகளும்—பிராரத்தங்களும்*
*ஊங்கு—இவ்வுடலூழாய்*
*என்னை நீங்கின—என்னை விட்டு நீங்கின.*
*(ஆகாமியங்களையும் நீரே என்றுகொண்டீர். அங்ஙனமாக நீர்)*
*அவை—அவ்வினைகளை*
*ஆரை—யாருக்கு*
*அருத்துவது—புசிப்பிக்கின்றீர்?*
*அதனால்—ஆகையால்*
*கருமம்—வினைகளை*
*அருத்துங் கடன்—(எனக்குப்) புசிப்பிக்கின்ற முறை*
*இன்றாம்—(உம்மிடம்) இல்லையாகும்;*
*தருமம் புரத்தல்—(உமது) தர்மரக்ஷணமும்*
*பெருமையது அன்று—சிறப்பைத் தாவில்லை.*
*(ஆகலின் நீர் என்னை)*
*இடர்ப்படு குரம்பையுள்—துன்பத்திற் கிடமாகிய வுடம்பில்*
*இருத்தி—புகுத்தி*
*துடைப்பதில்—(கருமத்தைப்) புசிப்பிப்பதில்*
*ஆ அருள்—இருக்கும் வியாமத்தை*



புகழ்தல்.

38. ஆவிக் குறுதுணை யாமுது குன்ற ரணிவரையாள்
காவிச் செழுமல ரொவ்வா திலங்குங் கவின்விழிகள்
தூவிக் கணையையுஞ் சொல்வே லினையுந் தூரப்பதனால்
வாவிக் கயல்கள் வளஞ்சேர்ந் திமைத்தலை மாற்றியவே. (௪

---

## அ. பாங்கற் கூட்டம்.

தலைவன் பாங்கனைச் சார்தல்.

39. தணிக்கும் பவத்தர் தொழுமுது குன்றர் தடஞ்சிலம்பில்
அணிக்கு மழகு பொருத்து மெழி லுடை யாயிழையார்
பிணிக்குப் பகர்மருந் தாகுந் துணைவனைப் பெட்புறுவோம்
குணிக்கும் புலத்துயர் கொள்ளனெஞ் சேயுன் குறையொழியே. (௧

பாங்கன் தலைவனை உற்றது வினாதல்.

40. ஏற்றுக் கொடியர் பழமலை யீச ரெழிலடியைப்
போற்றித்தொழுகிலர்காலன்முன்வாடிப்பொருந்துதல்போல்
வேற்றுப் படிவமுந் துன்படை நெஞ்சமு மேவினையால்
தோற்றப் பிழைவரவென்னேவென்காவல சொல்லுகவே. (௨)

தலைவன் உற்றதுரைத்தல்.

41. சுருதிப் பொருளர் பழமலை யீசர் சுடர்க்கிரிமேற்
பருதிக் கதிர்நுழை யாப்பொழிற் சூழலொர் பைங்தொடிதன்
பொருதிக் கணையொடு நீள்விழி வார்கடல் போந்தழுந்தி
வருதிக் கறிகில னன்பவென் னெஞ்ச மயங்கினனே. (௩)

தலைவனைப் பாங்கன் கழறல்.

42. நஞ்சுக் குரிய மிடற்றார் பனியி னகமுயிர்த்த
வஞ்சிக் குரிய பழமலை வாணர் மணிச்சிலம்பா
மஞ்சுக் குரியபொன் மின்கொடி போல்பவள் வாள்விழியால்
நெஞ்சுக் குரியமெய்க் கல்வியை நீக்குத னீதியன்றே. (௪)

---

38. இமைத்தலை - பிரகாசித்தலை. விழிகளானவை மாற்றின.

39. ஆயிழையார் பிணி - தலைவியால் உண்டான பிணி. துணைவனை - பாங்கனை. பெட்புறுவோம் - விரும்புவோம்.

40. படிவம் - வடிவம்.

41. இக்கணையொடு பொருது.

கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்.

43. விண்டுவந் தேத்தும் பழமலை வாணர் வியன்சிலம்பில்
உண்டுவந் தோர்க்கன்றி மற்றோர்க்கவ் வின்ப முணர்வரிதால்
வண்டுவந் தார்க்கு மலர்வார் கருங்குழன் மாதினைநீ
கண்டுவந் தாற்பின் னவமதிப் பாயலை கல்வியனே. (௫)

பாங்கன் கிழவோற்பழித்தல்.

44. சங்கந் தவழ்வயல் சூழ்முது குன்றர் கடஞ்சிலம்பிற்
சிங்கஞ் சிறுநாற் பிணிப்புண் டிருந்தெனத் தெவ்வடுதோட்
டுங்கந் துறந்துனைப் போன்றவர் நெஞ்சிற் றுணிவொழித்தே
அங்கந் தளருத லோர்மா னுக் காக வணியலவே. (௬)

கிழவோன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்.

45. அணியுற்ற நீள்மறு காரும் பழமலை யார்சிலம்பில்
பிணியுற்ற நீள் துய ருற்றோர்க்கு வேறோர் பிணிதரல்போல்
மணியுற்ற வார்குழற் கண்வலைப் பட்டு வருந்தினைநீ
தணிவற்ற நெஞ்சொடு நண்ப தகாமொழி சாற்றினையே. (௭)

பாங்கன் தன்மனத்தழுங்கல்.

46. கைந்நாக கங்கணர் நன்முது குன்றர் கவின்சிலம்பில்
மைந்நாகம் வங்கக் கடன்மூழ்கல் போலநம் மன்னுளமாம்
கைந்நாக மாமலை மூழ்கி வெளிப்படக் கண்டிலமால்
பைந்நாக வல்குற் படாமுலை யாள்கட் பரவையிலே. (௮)

பாங்கன் தலைவனோடழுங்கல்.

47. குலைசாய் கதலிகள் சூழ்முது குன்றர் குளிர்சிலம்பில்
சிலைசாய் புருவ வொருமாதுக் காகச் செறிகதிர்ச்செங்
குலைசா யயிற்கரத் தண்ணலுன் கல்வி குணங்குன்றுபோல்
மலைசாய் வுறினிலை வைப்பவ ராரிந்த வையகத்தே. (௯)

பாங்கன் அஃது எவ்விடத்து எவ்வியற்றென்றல்.

48. * * * * * * (௧௦)

46. கைந்நாகமென்றது மலைக்கு விசேடணம்.
47. கதிர்ச் செங்குலை - கிரணக் கொத்து.
48. * இச்செய்யுள் எனக்குக் கிடைத்த பிரதிகளில் இல்லை.



தலைவன் அஃதிவ்விடத் திவ்வியற் றென்றல்.

49. களவே கருங்குழல் வேலே விழிகள் கலைமதியின்
பிளவே நுதலென் னுயிரா கியவொரு பெய்வளைக்கு
வளவேய் செறியும் பழமலை வாணர் மணிச்சிலம்பே
உளமே பொருந்து மிடமாகு நண்ப வுரைத்திடினே. (௧௧)

பாங்கன் இறைவனைத் தேற்றல்.

50. பொருந்தா ரரணம் பொடித்தோர் முதுகுன்றர் பூஞ்சிலம்பில்
முருந்தார் சிறுநகைச் செவ்வாய் முகின்முலை மொய்குழல்சேர்
திருந்தா ரெழிலியைக் கண்டிங்கு வந்து செறியளவும்
இருந்தார் மணிப்புய நோவாம னீயிங் கிருந்தருளே. (௧௨)

பாங்கன் குறிவழிச் சேறல்.

51. கண்ணூர் நுதலர் பழமலை வாணர் கவின்சிலம்பில்
நண்ணூர்ச் செருக்க வயில்மன்ன னெஞ்ச நலிவுசெய்த
பெண்ணூ ரமுது மலர்ப்பொழில் சேர்ந்து பிறங்கிடுமோ
தண்ணூர் சுனையின் விளையாடி யிந்தத் தனிப்புனத்தே. (௧௩)

பாங்கன் இறைவியைக் காண்டல்.

52. மின்னே யிடைபொன் மலையே முலைகள் வியன்முகிலே
மன்னோர் குழல்கள் பெறுமிவள் நம்முடை மன்னவன்சொல்
பொன்னே யிருவர் வழுத்து முதுகுன்றர் பூஞ்சிலம்பில்
தன்னே ரிலாத விடமாகு மிந்தத் தடப்பொழிலே. (௧௪)

பாங்கன் இகழ்ந்ததற்கு இரங்கல்.

53. பணையார் தடங்கள் செறிமுது குன்றர் பனிவரைமேல்
துணையார் குவிமுலைப் பாரத்தி னொல்கித் துவளிடையும்
கணையா ரெழிலுடைத் தோளு முடையவிக் காரிகைதன்
பிணையார் விழிவலைப் பட்டா லெவர்திடம் பெற்றவரே. (௧௫)

பாங்கன் தலைவியை வியத்தல்.

54. விரையார் மலர்ப்பொழில் சூழ்முது குன்றர் வியன்சிலம்பில்
வரையார் தடந்தோ ணமநிறை காம வளர்பிணிக்குத்

50. எழிலி - அழகுடையவள்.
53. கணை - திரட்சி.

தரையா ரமுதற ழிம்மட மாதின் றனிவிழிசேர்
உரையா ருண்மருந் தல்லாற் பிறமருந் தொன்றிலையே. (௧௬)

பாங்கன் தலைவனை வியத்தல்.

55. இசையார் பெருவளஞ் சூழ்முது குன்ற ரெழில்வரையில்
நசையார் வனப்புறு மிம்மட மாதி னகைமுகத்தின்
மிசையார் விழிவச் சிரத்தால் மதனெனும் வேந்தெறிய
அசையா திருந்ததெவ் வாறெம் பிரான்ற னகமலையே. (௧௭)

பாங்கன் தலைவனுக்குத் தலைவிநிலை கூறல்.

56. பிறைகொண்ட செஞ்சடை நன்முது குன்றர் பெருவரையாய்
கறைகொண்டவேல்விழிசெவ்வாய்புணர்முலைகாம்புறழ்தோள்
சிறைகொண்ட வேரி னவயவம் பெற்றுநின் சிந்தையின்கண்
நிறைகொண்ட பூங்கொம்பு சோலையி லேதனி நின்றதுவே. ()

தலைவன் குறிவழிச் சேறல்.

57. பந்தங் கெடுத்தெனை யாண்முது குன்றர் பனிவரையில்
அந்த மலர்ப்பொழிற் சூழலி லென்னுயி ரம்புயமும்
சந்த முறுஞ்செங் கனியுங் குவளையுந் தானணிந்து
வந்திங் குறத்தனி நின்றிடு மோதவ வன்மையினே. (௧௮)

தலைவன் தலைவியைக் காண்டல்.

58. சூலார் முகில்படி காமுது குன்றர் சுடர்க்கிரிமேல்
சேலார் வரிவிழிச் செங்கனி வாயித் திருந்திழையாள்
நூலா ரிடையைத் தனங்கள் வருத்த நுவல்பொழிலில்
மாலா ரெழிலியை நோக்குறு மஞ்ஞையின் மன்னினளே. (௨0)

கலவியின் மகிழ்தல்.

59. பாம்பா கியபணி பூண்முது குன்றர் பனிவரையில்
காம்பா கியதோ ளமுதனை யாடன் கவிரிதழின்
தீம்பா கியலமு துண்டிமை யோருணுந் தெள்ளமுதம்
வேம்பா கியதெனி னென்போல வாரின்ப மேவினரே. (௨௧)

55. வேந்து - இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" தொல் அகத்திணை. சூ. 5.

57. உயிரென்றது தலைவியை.

58. மால் - பெருமை.



புகழ்தல்.

60. விண்கொண்ட சீருடைத் தென்முது குன்றர் வியன்சிலம்பில்
பண்கொண்டமென்மொழியாம்பலஞ்செவ்வாய்பழுதறுமோர்
தண்கொண்டமென்மலர்ப்பூந்தொடைவேய்ந்திடுதாழ்குழனின்
கண்கண்ட பின்னல வோகணை வெந்நிடக் கண்டதுவே. (௨௨)

தலைவன் தலைவியைப் பாங்கியோடு வருகெனப் பகர்தல்.

61. காரு மதியுந் தவழ்மாட வீதிக் கவின்முதுகுன்
றுரும் புரிசடைத் திங்களங் கண்ணி யமலர்வெற்பில்
நீரு நிழலு மணித்தாகி வெம்மையை நீக்குதல்போல்
சேருங் கனங்குழை நின்பாங்கி பின்வரச் சேர்ந்தருளே. (௨௩)

தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

62. உழைகண்ட கையர் பழமலை யீச ருயர்சிலம்பில்
மழைகண்ட மஞ்ஞை மகிழ்வது போல மணிகுயின்ற
இழைகண்ட கொம்மை யிளமுலை யாயுனை யேத்தியுறும்
குழைகண்ட கண்ணினர் சூழலிற் சென்று குறுகுவையே. (௨௪)

---

## ௯. பாங்கி மதியுடன்பாடு.

பாங்கி ஐயமுற்றோர்தல்.

63. அடியார் பிறவி யகற்றும் பழமலை யண்ணல்வெற்பிற்
படியார் சுனைபடிந் தாடலிற் கண்செம்மை பற்றியதோ
கடியார் பொழின்மலர் கொய்தத னாலோ கணைவிழிசேர்
துடியா ரிடையினர் வண்டலி னோமெய் துவண்டதுவே. (௧)

ஐயந் தீர்தல்.

64. பைங்குவ ளைத்தடஞ் சூழ்முது குன்றர் படர்சடைமேற்
றங்கு வளத்தினும் பைங்கூழ்க் கமுது தருதலினும்

60. அம்புகள் அம்பறாத்தூணியிற் போடப்பட்டு முதுகிற் றாங்கப்படுவ தனால் 'வெந்நிடக்கண்டது' என்றார்.

61. அணித்தாகி - ஒன்றற்கொன்று சமீபித்ததாகி.

63. படி - ஒப்பு; படிதலுமாம்; படிதல் - நீராடுதல்; முதனிலைத் தொழிற்பெயர். கடி - மணம். வண்டல் - மகளிர் விளையாட்டு.

பொங்கு திரைப்பாற் கடலிற் பிறந்த புதுமையினும்
செங்கை குவித்துப் பிறைதொழ வேண்டுந் திருந்திழையே. (௨)

சுனைவியந்துரைத்தல்.

65. நீர்மேவு செஞ்சடைச் சீர்முது குன்றர் நெடுஞ்சிலம்பிற்
றார்மேவு கூந்தலின் பாதே நினதிதழ் சார்சிவப்பும்
கூர்மேவு வாட்கண் கருமையுங் கொண்டுன் குழலிடத்தில்
ஏர்மேவு முல்லை புனைந்த சுனையி னிடமெதுவே. (௩)

சுனைநயப்புரைத்தல்.

66. நஞ்சார் மிடற்றர் பழமலை நாதர் நவில்சிலம்பில்
மஞ்சார் குழலி நுதற்குறு வேர்வும் வருவனப்பும்
பஞ்சா ரடிநின் னுடல்போல் வருமேற் பகர்சுனைநீர்
நெஞ்சார வாடி யுனைப்போல் வரவே நினைகுவனே. (௪)

தகையணங்குறுத்தல்.

67. விண்ணிற் சிறந்த விருத்தா சலத்தர் வியன்சிலம்பிற்
கண்ணிற் சிவப்புங் கவிரிதழ் வெண்மையுங் காட்டிலையேற்
பெண்ணிற் சிறந்த வவளை மறைத்துன்னைப் பேசலுமாம்
நண்ணிற் சிறந்த வவள்வந்த பின்னர் நடந்தருளே. (௫)

நடுங்க நாட்டம்.

68. நந்திக் கொடியுடை நம்முது குன்றர் நவில்சிலம்பில்
அந்திப் பிறைநிகர் கூர்ங்கோடு மார்பி லழுந்தும்வகைத்
தந்திப் பெருமலை பாய்ந்தது சீறியத் தந்திசெந்நீர்
சிந்திச் சிதைய வடர்த்தான்கை வேல்கொண்டோர் சேவகனே. (௬)

தலைமகன் பாங்கியை இரவுவலியுறுத்தல்.

69. பாம்பை யடுத்த சடைமுது குன்றர் பனிவரைமேற்
றாம்பை யடுத்து மணிக்கூவ னீரைத் தருபவர்போற்

64. கூழ் - பயிர்; பைங்கூழ்க்கு அமுது தருதல்: சந்திர கிரணத்தால் பயிர்களுக்குக் கரு உண்டாகுமென்பர்; "மண்ணிலொண் பைங்கூழ் வளர்ப்பதுன் னிடத்தம்மை வைத்திடுஞ் சத்தியேகாண்" மீனாட்சியம்மைபிள்ளைத் தமிழ், அம்புலிப். 5.

66. பஞ்சு ஆர் அடி - செம்பஞ்சுக்குழம்பை அணிந்த அடி; பஞ்சை ஒத்த அடியுமாம்.

67. விண்ணின் - சிவலோகம் போல.



றீம்பை விடுத்த விவள்வா யமுதுண்டு சேர்வதற்குக்
காம்பை யடுத்தநற் றோட்பாங் கியைத்தனி காண்குவமே. (௭)

பாங்கியை ஊர் வினாதல்.

70. செத்தார் பிறவாத் திருமுது குன்றர் செழுஞ்சிலம்பில்
இத்தார் மலையிற் றனியன் புனத்துக் கியல்புதியேன்
எய்த்தார்க் கருளு முமதா கியபதி யெவ்விடங்காண்
கொத்தார் மலர்க்குழற் கொம்பனை யீர்நின்று கூறுவிரே. (௮)

பேர் வினாதல்.

71. விரிக்குந் தலையுடைத் தாழையு மாவும் வியன்கமுகும்
நெருக்கும் பொழில்புடை சூழ்முது குன்றர் நெடுஞ்சிலம்பில்
இருக்கும் பதிப்பேர் சொலல்பிழை யேனு மிலங்குறுநீர்
தரிக்கும் பெயரா யினுமட வீர்சொலத் தக்கதுவே. (௯)

கெடுதி வினாதல்.

72. முன்னீர் பருகு முகிறூழ் முதுகுன்றர் மொய்வரைமேல்
மன்னீர் வடிக்கணை பாய்விசை யாலொரு மான்கலைமெய்
செந்நீர் விழுபுண் மருவப் புனத்தினிற் சேர்ந்ததுண்டோ
பொன்னீர் தெளித்த பொறிசுணங் கார்முலைப் பூவையரே. (௧௦)

மொழியாமை வினாதல்.

73. பிளவு மதியணி நன்முது குன்றர் பெருவரைவிண்
அளவு பிறைநுதன் மங்கைய ரேயும் மவிர்நகையேர்

69. கூவல் - கிணறு: தீம்பு - கீழ்மை; "தீம்பாய், மறக்குமோ" என்றார் கம்பர். காம்பு - மூங்கில்.

70. செத்தார் பிறவாத் திருமுதுகுன்று: "தூசினா லம்மை வீசத் துடையின்மேற் கிடத்தித் துஞ்சும், ஆசிலா வுயிர்கட் கெல்லா மஞ்செழுத் தியல்பு கூறி, ஈசனே தனது கோல மீந்திடு மியல்பா லந்தக், காசியின் விழுமி தான முதுகுன்ற வரையுங் கண்டான்" (கந்தபுராணம், வழிநடைப். 13), "நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு நல்கிய தந்தையுந் தாயும் நம்பனு நீயு மல்லிர்நும் மூர்க்கே நவின்றவம் முறையுளீர் நீவிர், பாடியா ரணஞ்சொ லீண்டுமாய் வனதாம் பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப் பழமலை தனது பெயர்வலக் காதிற் பகர்ந்தருள் செயப்பெறுஞ் செயலால்" (பெரியநாயகியம்மை விருத்தம், 6) என்பவற்றாலும் இது விளங்கும்.

72. விழு புண்: வினைத்தொகை. 73. ஏர் - அழகை.

விளைவு தருபுனல் வேலையில் மேவு வியன்றரளம்
களவு கொளுமென வோமொழி யொன்றுங் கழறிலிரே. (க

இவர்மனத் தெண்ணம் யாதெனத் தேர்தல்.

74. நீரும் பிறையு மணிமுது குன்றர் நெடுவரையும்
ஊரும் பெயருஞ் சொலுமென்பர் பின்ன ருயர்கலையோன்
ருருங் கணையுடன் வந்ததுண் டோவென் றறைகுவர்நீர்
ஒரு மொழியிலி ரென்பரென் ளுவிவ ருட்கொளலே. (கஉ)

எண்ணந் தெளிதல்.

75. இன்னு ரிவரென் றறிந்தில முன்ன ரெமையறியார்
மின்னார் சடையர் பழமலை வாணர் வியன்வரையிர்
பன்னீர் பதியெனப் பேசிப் பிறிது பகர்வதெல்லாம்
பொன்னு ரிவள்பொருட் டென்றென் மனத்திற் பொருந்தியதே.(கங)

கையுறை ஏந்தி வருதல்.

76. தாவு முழைகொள் கரத்தார் பழமலைத் தண்சிலம்பிற்
காவும் பொறியு மொருங்குடன் வைகிக் கலந்துறல்போல்
மேவுந் தலைவி யிகுளையைச் சார்ந்த வியலிடநம்
நோவும் பரிவு மிதுவே யமைதி நுவலுதற்கே. (கச)

தலைவன் அவ்வகை வினுதல்.

77. மறையார் புகழுடை மாமுது குன்றர் மணிவரைமேற்
பிறையார் நுதலுடைப் பெய்வளை யீர்நம் பெரும்புனத்தே
கறையார் கணைபாய் துயரிற் கலங்கிக் கடுவிசையாற்
குறையார் மனத்தொர் கலைவந்த தோவிங்குக் கூறுவிரே. (கரு)

பாங்கி தலைமகற்கு எதிர்மொழி கொடுத்தல்.

78. மன்மா லறியாப் பதமுது குன்றர் மணிவரைமேற்
பொன்மான் றொடரும் புயல்வண்ணன் போலிப் புனம்வருவீர்
வின்மால் கணைபட வெய்துயிர்த் தஞ்சி வெருண்டெழுந்த
வன்மான் கலைதனி வந்திடக் கண்டு வதிந்திலமே. (கசு)

---

75. பதி பன்னீர் - ஊரைச் சொல்லுங்கள். பொன் ஆர் - திருமகளை ஒத்த.
76. கா - சோலை. பொறி - வண்டு. இகுளை - தோழி.
77. கறை - இரத்தம்.
78. [illegible] மன்.

# செய்தித்திரட்டு.

திருவண்ணாமலை:—திருக்கார்த்திகைத்தீப மஹோத்ஸவம், கஉ முதல் [illegible]வரை மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் சுவாமி வெ[illegible]ருளிக் காட்சி கொடுத்தனர். ஆரியவேத தமிழ்வேத பாராயணங்களும் [illegible]யங்களும் செவிக்கின்பத்தையும் பக்தியையும் விளைவித்தன.

திருக்கார்த்திகையன்று இலட்சக்கணக்கான பத்தர்கள் தீபதெரிசனம் செய்து திருவருள்பெற் றுய்ந்தார்கள். களஉ தெப்போற்சவமும், கஅஉ கிரிப்பிரதக்ஷணமும் சிறப்பாக நடைபெற்றன. கஙஉ சுப்பிரமணிய சுவாமிக்குத் தெப்போற்சவம் நடைபெற்றது.

பிர்மோத்ஸவத் தொடக்க முதல் முடிவுவரை சக்திவிலாச சபையின் ஆதரவில் திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் உயர்திரு சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகள் தலைமையில் அநேக வித்வான்கள் சமய சம்பந்தமான சொற்பொழிவாற்றினார்கள். சுவாமிகளின் பிரசங்கம் கற்கண்டோ கனிரசமோ தீம்பாகோ செழுந்தேனோ எனத்தித்தித்தது. ஒவ்வொருநாளும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் செவியேற் றின்புற்றார்கள். சுவாமிகளது தமிழ்த்தொண்டு சமயத்தொண்டு முதலியன மிகவும் பாராட்டத்தக்கன. இவ்வழியை மற்றமடாதிபதிகளும் பின்பற்றுவதே நன்றாகும்.

சிவநேசத் திருக்கூட்டத்தாரும் சமயப்பிரசாரம் புரிந்தனர். சுகாதார ஏற்பாடுகளும், போலீசார் கடமை புரிந்ததும் திருப்திக்குரியனவே.

கரிசூழ்ந்தமங்கலம்:—ஸ்ரீ ஆனந்தநடேசர் கோவிலில் கார்த்திகை கஉ திங்கட்கிழமை திரு. பா. செவ்வாமி ஐயரால் காலையில் சங்காபிஷேகமும், இரவு அலங்கார ஆராதனைகளும், திரு நடேசபாகவதராலும் மதுரை தேவபாகவதராலும் வாய்ப்பாட்டும், திரு. நாணுபாகவதர் குமாரர்களால் [illegible]மும், ஹார்மோனியமும் அதிவிமரிசையாக நடந்தேறின.

கார்த்திகைச் சோமவாரம்:—[illegible]ளும், திருக்கார்த்திகை யன்றும், [illegible]க்குத் திரளான அன்பர்கள் வந்து தெரிசித்தார்கள். கண்டனூரிலும் ஆத்தங்குடியிலும் கடைசிச் சோமவாரத்தன்று மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. கண்டனூருக்குப் பலவூர்களிலிருந்தும் பெருந்திரளான அன்பர்கள் வந்து காட்சி கண்டனர்.

தென்னூர்:—செந்நெறி நிற்கும் சீர்மையாளரும், சிவனை மறவாச் சிந்தையரும், செந்தமிழை மிகமேன்மையுடன் பயின்று தேர்ச்சியுற்றவரும், கரு[illegible] பொறை அன்பு ஆகியவைகளே உருப்பெற்ற தெனச் சிறந்து திகழ்பவரும், தென்னிந்திய ரயில்வே ஜெண்டாபீஸ் எழுத்தாளர்களின் றலைவரும் ஆகிய திரு: அ. கணபதி பிள்ளையவர்களின் மனைவி திருமதி வேதவல்லியம்மையார், கார்த்திகை உஉ இறைவர் திருவடிநீழ லெய்தினர். கற்பரசியாகிய அவ் வம்மையாரின் அங்கம் திருக்கற்குடியின்பாங்கர் குடமுருட்டி யென்னும் கங்கையிற் சேர்க்கப்பெற்றது.

தஞ்சைஜில்லா-திருபுவனம்:—வீராவிமலை சுவாமிக ளென்ற சதாசிவ சுவாமிகளுக்குப் பக்தாபிமானிகள் குருபூஜை நடத்தினர். சிலதினங்கட்குப் பிறகு தேவகோட்டை திருவாளர் அள. சுப. ராம. சுப்பிரமணியன் செட்டியார் அபிஷேக ஆராதனங்களும் சிறப்பாக நடத்தினர். [illegible] அன்னதானம் [illegible] அமர்ந்தி யபசரிந்தனர்.

20 DEC 1933 MADRAS

தமிழன்பர் மகாநாட்டுக்குப் பிரதிநிதி:—அண்ணாமலை சர்வகலாசாலையினர் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்களைத் தங்கள் பிரதிநிதியாக அனுப்பத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

இராஜப்பிரதிநிதி:—தம்மனைவியுடன் 13—12—1933 காலை 10 மணிக்குப் புதுக்கோட்டைக்கு வந்து, வைபவங்கள் ஆனபிறகு [illegible] மார்க்கமாகச் சென்னைக்குச் சென்றனர்.

சிதம்பரம்:—திருவாதிரைத் திருநாள் கூஉ தொடங்கி, கஎஉ சூரிய உதயத்துக்கு முன் இராஜசபையில் சிவகாமசுந்தரி சமேத நடராஜமூர்த்திக்கு மகாபிஷேகம், திருவாபரண அலங்கார ஆராதனை, நண்பகல் மகாதெரிசனம், ஞானாகாச சிற்சபா பிரவேசம், அடுத்தநாள் புஷ்பப்பல்லக்குக் காட்சி யாகியவைகளுடன் நடைபெறும்.

சைவசித்தாந்த மகாசமாஜம்:—இருபத்தெட்டாம் ஆண்டு நிறைவிழாவும், சைவர் மகாநாடும், கரந்தைத் தமிழ்ச்சங்க நிலையத்தில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தலைமையில், கஙஉ முதல் மூன்று நாட்கள் நடைபெறும். இவ் விழாவையும் மகாநாட்டையும் ஒட்டிச் சைவமங்கையர்மகாநாடு பல்லாவரம் மாணிக்கவாசக சரோஜினியம்மாள் தலைமையிலும், சைவ இளைஞர் மகாநாடு தஞ்சை திருவாளர் சீ. கந்தசாமி பிள்ளையவர்கள் தலைமையிலும் நடைபெறும்.

ரெய்கோன்:—இண்டோ சைனு கவர்மெண்டார், தேசப் பிரஷ்டமான செட்டியார்களெல்லாம் திரும்பிவர அனுமதித்துள்ளார்கள்.

பாஸியன்:—செட்டியார்சமூகத்தினர் நிலவரியைக் குறைக்கத் தகுந்த காரணங்களுடன் பர்மாக் கவர்னருக்கு விண்ணப்பம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

தீரு. ஆவுடையப்ப செட்டியார்:—ஆகாயவிமானத்தில் கற்கத்தாவிலிருந்து 11—12—1933 காலை 9—20 க்குப் புறப்பட்டு மாலை 5 மணிக்கு ரெங்கோன் போய்ச் சேர்ந்தார்.

காஞ்சீபுரம்:—திரு நாகேஸ்வரத் திருப்பணியாளரும், திருப் பெருந்துறைத் தேவார திருவாசக பாடசாலை ஸ்தாபகருமாகிய அரிமழம் சிவநேசத் திருவாளர் அ. அரு. அண்ணாமலைச் செட்டியார், காமாக்ஷியம்மை சமேத ஏகாம்பரநாதசுவாமி திருவருளால் இத் திருத்தலத்தில், கார்த்திகை ௨உ தேவார திருவாசக பாடசாலை ஸ்தாபனம் செய்துள்ளார்கள். அவர்களது சிவ புண்ணியச் செயலைப் பாராட்டி காஞ்சீபுரம் திருவாளர் பெ. ப. தில்லை முதலியார் மனமுவந்து வாழ்த்துப்பா வழங்கியுள்ளார்கள். ஏகம்பத்துறை எந்தை யருளால் என்றும் நின்றே நிலவுவதாக!

சென்னை:—சிந்தாதிரிப் பேட்டை வேதாந்த சங்கத்தின் கடூ-வது வருஷோத்ஸவ சங்கம் கஉ முதல் கஎஉ வரை, சாமிநாயக்கன் தெரு 94 இலக்கமுள்ள தெ [illegible] சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். தக்கார் பலர் தலைமை வகிப்பார்கள். அரிய பெரிய விரிவுரைகள் நிகழும். சாதுக்களுக்கு அமுதருத்தி உபசரிப்பு நடைபெறும்.

[illegible] பொன்னேரி மறைத்திருவாளர் தி. [illegible] [illegible]ஐயங்காரவர்களுக்கு, இச் சிறப்புப்பெயர் தேவகோட்டை திருவாளர் ஆ. தி. சிதம்பரச் செட்டியாரவர்களால் வழங்கப்பெற்றுள்ளது.